விலை: 30.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 039 வள்ளுவர் ஆண்டு 2053 தை 14 வியாழக்கிழமை (27.01.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/- + 500/-

## இளையோரின் ஏற்றத்திற்கான எமது முயற்சியை கொச்சைப்படுத்தாதீர்கள்



கம்பவாரிதி இ.ஜெயராஜ்

10 ➤

## "கால அவகாசம் வேண்டாம் நீதியே வேண்டும்"

உறவுகள் போராட்டம்



(03ஆம் பக்கம் பார்க்க)

### மக்களின் தேவையை நிறைவேற்ற முடியாவிட்டால்

# அதிகாரத்தை கைவிட்டு வீட்டுக்குச் செல்லுங்கள்

### பாராளுமன்ற உறுப்பினர் ஏரான் விக்ரமரத்ன



(கொழும்பு)

மக்களின் தேவையை நிறைவேற்ற முடியாவிட்டால் அதிகாரத்தை கைவிட்டு வீட்டுக்குச் செல்லுங்கள் என ராஜபக்ச அரசாங்கத்திடம் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஏரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப் பின்போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

நாட்டு மக்களுக்கு உணவு வேண்டும். மின்சாரம் வேண் டும் என அரசாங்கத் திடம் கும்பிட்டு கோரி ➤15

## கொரோனா 16 பேர் மரணம்

(கொழும்பு)

கொரோனாத் தொற்றால் நாட் டில் மேலும் 16 பேர் உயிரிழந் துள்ளனர்.

இந்நிலையில், நாட் டில் கொரோனா தொற்று ➤15

### ஆயிரத்தை நெருங்கும்

## நாளாந்த தொற்றாளர்கள்

நேற்றும் +927 பேர் அடையாளம்

(கொழும்பு)

கொரோனா தொற்று உறுதி யான மேலும் 927 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ள னர்.

இதற்கமைய, நாட் ➤15

## ராஜபக்ச அரசின் பொய்ப்பரப்புரை அம்பலம்!

### பிரித்தானிய தூதரகம் அறிக்கை




(கொழும்பு)

ராஜபக்ச அரசாங் கத்தின் பொய்ப்பரப் புரையை பிரித்தானிய தூதரகம் வெளியிட் டுள்ள அறிக்கையில் கண்டறியப்பட்டுள் ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

பிரித்தானியாவின் தெற் காசிய மற்றும் ஐ.நா விவகாரங் களுக்கான அமைச் சர் தாரிக் அகமட் கட ➤15

### இலங்கை-இந்திய மீனவர் பிரச்சினைகளில்

## இரு நாடுகளுக்கும் இடையிலான உறவையும் கவனத்தில் எடுக்க வேண்டும்

### நீதி அமைச்சர் அலி சப்ரி

(கொழும்பு)

இந்திய மீனவர்களின் அத்து மீறிய மீன்பிடி செயற்பாடுகள் தொடர்பில் சட்ட திருத்தங்களை மாத்திரம் மேற்கொண்டு பிரச்சினைகளுக்கு தீர் ➤15

## என்றுமில்லாதவாறு ஆட்சியை வழங்கமுடியும்

### நாட்டு மக்களுக்கு ஜே.வி.பி. உறுதி

நாட்டில் என்றுமில்லாதவாறு சிறப்பானதொரு ஆட்சியை எம் மால் வழங்க முடியும் என மக் கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தலைவரும் பாராளு மன்ற உறுப்பினருமான அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். ➤15

### 36 மாணவர்களுக்கு

## வவுனியாவில் கொரோனா

(வவுனியா)

வவுனியா பல்கலைக்கழகம் மற்றும் கல்வியியற் கல் லூரி மாணவர்கள் 36 ➤15

### தனங்கிளப்பில்

## வீட்டிலிருந்து சடலம் மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரி வுக்குட்பட்ட தனங்கி ளப்பு-மறவன் புலவு ➤15

### கிளிநொச்சியில் வெவ்வேறு சம்பவங்களில்

## தீக்காயத்துக்குள்ளான இருவர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் வெவ்வேறு விதமான விபத்து சம்பவங்களில் தீக்காயத்துக்குள்ளான இரு குடும் பஸ்தர்கள் உயிரிழந்துள் ளார்கள். ➤15

### இயற்கை உரத்தினை பயன்படுத்தி

## இராணுவம் மேற்கொண்ட வயல் அறுவடை விழா



(முல்லைத்தீவு)

ஜனாதிபதியின் பசுமை விவசாய செய்கை திட்டத்தின் கீழ் இயற்கை உரத் தினை பயன்படுத்தி முல்லைத் ➤15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் 14 வயது சிறுமியைக் காணவில்லை

## மக்களிடம் உதவி கோரும் பொலிஸார்

கிளிநொச்சியில் 14 வயது சிறுமியை காணவில்லை என பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.



கிளி., பழைய கச்சேரி வீதி, கிளிநகர் பகுதியில் வசிக்கும் செந்துரான் பகலினி என்ற 14 வயதுடைய சிறுமியே கடந்த 17ஆம் திகதியிலிருந்து காணவில்லை.

பொலிஸார்சிறுமி தொடர்பாக பெற்றோரிடம் வினவிய போது, கடந்த 17 ஆம் திகதி மகளைக் காணவில்லை என்று முறைப்பாடு செய்யப்பட்ட இரண்டு நாட்களுக்கு பின்னர், தங்களுக்கு தொலைபேசியூடாக மிரட்டல் விடுக்கப்பட்டதாக தெரிவித்துள்ளனர்.

சிறுமி தொடர்பாக தகவல் அறிந்தவர்கள் 077418 8975 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் கேட்டுள்ளனர். (ம)


# தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு
வலிகாமம் பகுதியில்
வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு:-

077 644 6514

(C-3645)



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர்பட்டப் படிப்புகள் பீடம்
## புதிய அனுமதிகள்

1. தமிழில் முதுமாணி (Master of Tamil) 2022/23 (அணி VIII)
2. சைவசித்தாந்தத்தில் முதுமாணி (Master of SaivaSiddhanta) 2022/23 (அணி VII)
3. பண்பாட்டியலில் முதுமாணி (Master of Cultural Studies) 2022/23 (அணி IV)
4. சுற்றுச்சூழல் முகாமைத்துவத்தில் முதுமாணி (MSc in Environmental Management) 2022/23 (அணி III)
5. நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் பட்டப்பின் டிப்ளோமா (PGD in Library & Information Science) 2022/23 (Batch IV)

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்களை உயர்பட்டப் படிப்புகள் பீடத்தின் வலைத்தளத்தில் (www.grad.jfn.ac.lk) பார்வையிடலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி – 28.02.2022**
**மேலதிக தொடர்புகளுக்கு – 021 222 3608**

**பதிவாளர்**
**25.01.2022** (C-3639)



# அறிவித்தல்
## காவலாளி பதவிக்கு வெளிவாரியாக விண்ணப்பம் கோரல்

| | |
|---|---|
| பெயர் | - மு/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம், 7ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு |
| பதவி | - காவலாளி (நிரந்தரம்) |
| சம்பளக் குறியீட்டு இல. | - 315/16 |
| சம்பள அளவுத் திட்டம் | - 15,135 - 120 X 10 - 135 X 10 - 17,685.00 |
| மேலதிக படிகள் | - இத்துடன் சுற்றுநிருபத்திற்கமைவான படிகள் அனைத்தும் வழங்கப்படும். |

## அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

- கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

- 05 ஆம் தர கல்விச் சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

♦ சங்க எல்லைப் பரப்பில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
♦ விண்ணப்பிக்கும் பதவி கடித உறையின் மேற்பக்கத்தில் குறிப்பிட வேண்டும்.
♦ கல்வித் தகைமை சான்றிதழ் பிரதி இணைத்தல் வேண்டும்.

குறிப்பு :- மதுப் பாவனையற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மேற்படி தகைமையுடைய விண்ணப்பதாரர்கள் எதிர்வரும் 2022.02.01 ஆம் திகதி தொடக்கம் 2022.02.14 ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு முன்னர் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை தயாரித்து **"தலைவர், புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம், புதுக்குடியிருப்பு"** என்னும் முகவரிக்கு நேரில் அல்லது பதிவுத் தபால் மூலம் விண்ணப்பத்தினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.



**தலைவர்,**
**புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம்,**
**புதுக்குடியிருப்பு.** (C-3644)



# ஆசிரியர்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல தனியார் கல்வி நிறுவனம் ஒன்றுக்கு தரம் - 6,7,8 இற்கு விஞ்ஞானம், கணிதம், குடியியல், சைவசமயம் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்களும் தரம் - 9,10,11 இற்கு விஞ்ஞானம் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்களும் உடன் தேவை.
அனுபவம் உள்ளவர்களும் பாடசாலை ஆசிரியர்களும் விரும்பத்தக்கது. (9847)

077 459 8440



# காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் சுன்னாகம் சந்தியிலிருந்து புன்னாலைக்கட்டுவன் வீதியில் மெயின் றோட்டில் இரண்டாவது காணி கண்ணகை அம்மன் கோவில் வீதியில் 8 ½ பரப்புக் காணி 2 பரப்பாகவும் 1 ½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு.

**(சுன்னாகம் பஸ் நிலையத்திலிருந்து 2.5 Km தூரம்)**

தொடர்பு:-

077 658 5999 (9863)



# காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம், கைதடி வடக்கில் தபால் நிலையம் அருகாமையில் 9 நிலப்பரப்பு 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. (9862)

ஒரு பரப்பின் விலை - 120,000/=
(ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய்)

**(கைதடி சந்தியிலிருந்து 2 Km தூரம்)**

077 288 0152, 077 911 6983



# மெசின் கல்லு அடிக்கும் வேலையாள் தேவை

சாவகச்சேரி நகரில் உள்ள கல்லாக்கல் தொழிற்சாலை ஒன்றுக்கு மெசின் கல்லு அடிக்கும் வேலையாள் தேவை.

**அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.**
**தேவைப்படின் தங்குமிடம் ஒழுங்கு செய்து தரப்படும்.**

தொடர்புகளுக்கு:-

077 940 0963 (C-3647)



# யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் சங்கம் (வ/து)
## ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் - 2022

| | |
|---|---|
| **காலம்** | :- 27.02.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி |
| **இடம்** | :- கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம் |
| **தலைமை** | :- திரு.செ.ஜெயக்குமார் (சங்கத் தலைவர்) |

குறிப்பு
மேற்படி சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் 27.02.2022 அன்று நடாத்த தீர்மானித்திருப்பதனால் அங்கத்தவர் பிரேரணைகள் இருப்பின் தங்கள் பிரேரணைகளை 16.02.2022 புதன்கிழமைக்கு முன்னதாக் சங்கக் காரியாலய முகவரிக்கு செயலாளர் என அனுப்பி வைக்கவும். அத்துடன் அங்கத்தவர்கள் பிள்ளைகள் பல்கலைக்கழக அனுமதி பெற்றிருப்பின் அவற்றின் விபரங்களையும் சங்கக் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**[illegible]மலை வீதி,** **செயலாளர்**
**கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.** (C-3641) **க.செல்வச்சந்திரன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கால அவகாசம் வேண்டாம் நீதியே வேண்டும்"

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் வவுனியா மாவட்டச் செயலகம் முற்றுகை

(குருமன்காடு)

**வவுனியாவில் நீதி அமைச்சின் நடமாடும் சேவைக்கு எதிராக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வவுனியா மாவட்ட செயலக வளாகத்திற்குள் நுழைய முற்பட்டதால் பதற்ற நிலை ஏற்பட்டதுடன், அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டதையடுத்து முறுகல் நிலையும் ஏற்பட்டது.**

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணை உள்ளடங்கலாக நீதி அமைச்சின் நடமாடும் சேவை வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது. இச் சேவைக்கு எதிர்ப்பு தெரிவித்து வவுனியா மாவட்ட செயலகம் முன்பாக குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட செயலகம் முன்பாக ஒன்று கூடிய காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்,

"நீதி அமைச்சினால் நீதி கிடைப்பதில்லை", "கால அவகாசம் வேண்டாம்", "நீதி தான் வேண்டும்". "செயற்றிறனற்ற ஓஎம்பியை நம்பி காலத்தை கடத்தாது இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துங்கள்" என



எழுதப்பட்ட பதாகைகளையும் காணாமல் ஆக்கப்பட்டோரின் புகைப்படங்களையும் கறுப்பு கொடிகளையும் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது நீதி அமைச்சின் நடமாடும் சேவை நடைபெற்ற மாவட்ட செயலக வளாகத்திற்குள் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நுழைய முற்பட்ட போது பொலிஸார் அதனை தடுத்து நிறுத்தினர். இதனால் இரு பகுதியினருக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டதுடன், பொலிஸார் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளை அவ்விடத்தில் இருந்து வெளியேற்ற கடும்பிரயத்தனம் செய்தனர்.

இருப்பினும், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டதுடன் சில தாய்மார் கதறியழுது மயங்கி விழுந்த நிலையில் நோயாளர் காவு வண்டி மூலம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தனர். போராட்டம் தொடர்ந்தும் இடம்பெற்றதையடுத்து நீதிச்சேவை ஆணைக் குழு உறுப்பினர்கள் சிலர் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுடன் மாவட்ட செயலக வாசலுக்கு சென்று கலந்துரையாடியதுடன், அவர்களை தமது நடமாடும் சேவைக்கு வரு மாறும் அழைத்தனர். ஆனால் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அதற்கு மறுப்பு தெரிவித்து அங்கிருந்து வெளியேறிச் சென்றிருந்தனர். (நி-250-299)



## வடக்கு மக்களின் நம்பிக்கையை முதலில் வெல்ல வேண்டும் - சுனில் ஹந்துன்நெத்தி

(கொழும்பு)

நாட்டில் ஒரு நினைவுத் தூபியை அமைத்து அதன் ஊடாக யுத்தத்தில் உயிரிழந்த இராணுவத்தினரை மாத்திரமன்றி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களையும் நினைவுகூர முடியுமென மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மக்களின் நம்பிக்கையை முதலில் வெல்ல வேண்டும் எனவும், எனினும் கோட்டாபய - மகிந்த அரசாங்கத்திற்கு அதனைச் செய்ய முடியாமல் போயுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஊடகம் ஒன்றிற்கு அவர் வழங்கிய விசேட செவ்வியின் போது, அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார். தொடர்ந்தும் பேசிய அவர்,

"வடக்கு மக்கள், கிழக்கு மக்கள் என வேறுபாடு எம்மிடம் கிடையாது, அப்படியான வேறுபாடு தவறானது. அவர்கள் வாழும் பிரதேசங்களுக்கு அமைய அவர்கள் மாறுபடலாம். அவர்கள் சிறுபான்மையினர் என அழைக்கப்படுகின்றனர்.

ஆனால் நாங்கள் அவர்களை அப்படி அழைக்கமாட்டோம். எங்களிடம் அந்த வார்த்தைக்கே இடமில்லை.

அங்குதான் முதலில் வேறுபாடு உருவாகின்றது. ஆகவே அப்படியொன்றும் இல்லை. அவர்கள் அனைவரும் இலங்கையர்கள்.

ஒவ்வொரு இடத்திலும் நினைவுத் தூபிகளை அமைக்க தேவையில்லை. நாட்டில் ஒரு



நினைவுத் தூபியைத் தான் அமைக்க வேண்டும்.

அதில் இராணுவத்தில் இறந்தவர்களையும் நினைவுகூரலாம், விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து இறந்தவர்களையும் நினைவுகூரலாம் - யுத்தத்தை மறுக்கும் ஓர் இடமாக அது அமையும்" என அவர் தெரிவித்தார். (நி)

## நெருக்கடிக்கு மத்தியில் மின்சார சபையின் தலைவர் பதவி விலகினார்

(கொழும்பு)

நாட்டில் மின்சார விநியோகத்திற்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.எம்.சி.பெர்னாண்டோ பதவி விலகுவதாக அறிவித்துள்ளார்.

அதன்படி, எதிர்வரும் முதலாம் திகதி முதல் தான் பதவி விலகவுள்ளதாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அவர் கடிதம் அனுப்பியுள்ளார்.

பல தடவைகள் மின்சார சபையின் தலைவராக பதவி வகித்த எம்.எம்.சி.பெர்னாண்டோ, யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் அரசாங்கத்திற்கு சொந்தமான பங்குகளை அமெரிக்க நிறுவனத்



துக்கு மாற்றுவதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதையடுத்து, பெரும் சர்ச்சைக்கு உள்ளானார்.

இதற்கு மின் பொறியாளர்கள் மற்றும் ஏனைய ஊழியர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)



இந்தியாவின் 73 ஆவது குடியரசு தின நிகழ்வு நேற்று யாழ்.இந்திய துணைத்தூதரகத்தில் இடம்பெற்றது. யாழ். இந்திய துணைத்தூதரகத்தின் பதில் துணைத்தூதுவர் ராம் மகேசினால் இந்திய தேசியக்கொடி ஏற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப்பட்டு இந்திய குடியரசுத் தலைவரின் சிறப்புரையும் வாசிக்கப்பட்டது. அதன் பின்னர் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (படங்கள்:-சிவசாந்தன், ரவிசாந், கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 ஆம் ஆண்டு நினைவலைகளுடன்



மலர்வு : 17.05.1958 அமரர் உதிர்வு : 07.02.2021

## நித்தியானந்தம் லங்கநாதன்

திதி:தசமி (27.01.2022)

ஓராண்டு நகர்ந்தாலும்
ஒருநொடி கூட நம்பமுடியவில்லை
நேற்றுக் கண்ட உமை நினைத்து
நெஞ்சம் தடுமாறுகின்றதே!
மருத்துவத்திற்காய் சென்ற நீங்கள்
மண்விட்டு மறையும் காலம்
வெகு விரைவில் வருமென
மனதளவிலும் எண்ணவில்லை
மனமாறாத் துயரோடு விழியோடு நீர் சொரிய
வழி கடந்து செல்கின்றோம் உங்கள் நினைவோடு
கண்ணீர் மலர்தூவி அஞ்சலிக்கும் இந்நாளில்
இறையோடு கலந்த உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அம்பன்,
குடத்தனை.

மருமக்கள் மற்றும்
குடும்பத்தினர்

(C-3642)

# ஐ.பி.எல். தொடரில் புதிதாக களமிறங்கவுள்ள லக்னோ சுப்பர் ஜெயன்ட்

நடப்பு ஐ.பி.எல். இருபது-20 கிரிக்கெட் தொடரில் புதிதாக களமிறங்கவுள்ள லக்னோ அணியின் பெயரை அணி நிர்வாகம் வெளியிட்டுள்ளது.

இதன்படி, லக்னோ அணிக்கு 'லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ்' என பெயரிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே, 2016 ஆம் மற்றும் 2017 ஆம் ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற ஐ.பி.எல். தொடரில் புனே அணியை வாங்கியிருந்த சஞ்சீவ் கோயங்கா அதற்கு ரைஸிங் புனே சுப்பர் ஜெயன்ட் எனப் பெயர் சூட்டியிருந்தார்.

இந்நிலையில், தற்போது லக்னோ அணியை வாங்கியுள்ள கோயங்கா, இதற்கும் சுப்பர் ஜெயன்ட் என்றே பெயர் சூட்டியுள்ளார்.

லக்னோ அணியின் பயிற்சியாளராக ஆன்டி பிளவர் மற்றும் ஆலோசகராக கௌதம் கம்பீர் ஆகியோர் ஏற்கனவே தேர்வு செய்யப்பட்டனர்.

ஏலத்துக்கு முன்பாக லக்னோ அணி, மூன்று நட்சத்திர வீரர்களான கே.எல். ராகுலை 17 கோடி ரூபாவுக்கும், அவுஸ்திரேலியாவின் மார்கஸ் ஸ்டாய்னிஸை 9.2 கோடி ரூபாவுக்கும் இந்திய வீரரான ரவி பிஷ்னாயை 4 கோடி ரூபாவுக்கும் வாங்கியது.

ஐ.பி.எல். இருபது-20 கிரிக்கெட் தொடரின் 15 ஆவது தொடர், இந்தாண்டு மார்ச் மாதம் இறுதியிலிருந்து மே மாத இறுதி வரை நடைபெறும் என இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை அறிவித்துள்ளது. (6)

# சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு - பெரேரா



சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் தில்ருவன் பெரேரா அறிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபைக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்து தனது சர்வதேச கிரிக்கெட் பயணத்திலிருந்து ஓய்வு பெறுவதற்கான சரியான தருணம் இதுவென அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், இன்னும் சிறிது காலம் உள்நாட்டு கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

39 வயதான தில்ருவன் பெரேரா இறுதியாக காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இங்கிலாந்து அணிக்கெதிராக 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் விளையாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (6)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2496

### றெபேக்கா




### நிதுஷா




### துவாரகா





### நிதுஸன்




### றஞ்சன்




### வைத்தீஸ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளின் நட்டத்தை ஈடுசெய்ய 40 ஆயிரம் மில்லியன் போதுமானதல்ல

## நளின் பண்டார தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தை பொறுப்பேற்கத் தயார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.



இதேவேளை நாளை மறுதினம் சனிக்கிழமை ஐக்கிய மக்கள் சக்தியின் விவசாய பிரகடனம் வெளியிடப்படவுள்ளதாகவும் அவர் நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார்.

விவசாயத்தின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு விவசாயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்களை உள்ளடக்கி இந்த பிரகடனம் வெளியிடப்படவுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையிலான குழுவினர் இன்னும் சீனாவில் இருந்து சேதனப்பசளைகளை கொண்டு வருவதற்கு எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் எனினும் அது கிடைப்பதற்கான சாத்தியங்கள் இல்லையெனவும் நளின் பண்டார குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் விவசாயிகள் அடைந்துள்ள நட்டத்தை ஈடுசெய்வதற்கு அரசாங்கம் 40 ஆயிரம் மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்வது போதுமானதல்ல எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வாறு நட்டஈடு வழங்கும் போது, எங்கிருந்து பணத்தை வழங்குவது, பணத்தை அச்சிட்டே வழங்க வேண்டுமெனவும் அவ்வாறு அச்சிட்டு வழங்கினால் அதன் காரணமாக பணவீக்கம் அதிகரித்து மீண்டும் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் எனவும் நளின் பண்டார மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைக்குமாறு வலியுறுத்தி ஹற்றனில் துண்டுப் பிரசுரம்

(ஹற்றன்)

அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைக்குமாறும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு எவ்வித நிபந்தனையும் இன்றி நாள் சம்பளமாக ஆயிரம் ரூபாவை வழங்குமாறும் வலியுறுத்தி ஹற்றன் நகரில் நேற்று புதன்கிழமை துண்டுப் பிரசுரம் விநியோகிக்கப்பட்டது.

ஜே.வி.பியின் பெருந்தோட்டத்துறைசார் தொழிற்சங்கமான அகில இலங்கை அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டிலேயே இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (நி)

# விவசாய, கமநல காப்புறுதி சபையின் தலைவர் இராஜினமா

(கொழும்பு)

விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபையின் தலைவர் பிரேமச்சந்திர எபா தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

அரசுக்கு சொந்தமான நிறுவனத்தில் இனி மனசாட்சிப்படி செயற்பட முடியாது என்பதால் இந்த முடிவை எடுத்ததாக அவர் தெரிவித்தார். (நி)

# பாகிஸ்தான் பிரதமருடன் விவசாய அமைச்சர் பந்துல சந்திப்பு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் அலுவலகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக வர்த்தக அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)


**5 ஆம் ஆண்டு நினைவில்** | **6 ஆம் மாத நினைவில்**



அமரர்.
திருமதி.கந்தையா நாகம்மா

பிறப்பு: 1944.02.12
இறப்பு: 2017.01.27

அன்பு என்ற வார்த்தையின் ஆணிவேராய் எம் நெஞ்சில் நிலைத்தவர்களை எப்படி மறக்க முடியும்...? இந்த ஜென்மமல்ல இன்னும் ஏழேழு ஜென்மம் எடுப்பினும் எம் நெஞ்சில் வாழ்வீர்கள் தெய்வமாய்!



அமரர்.
திருமதி.ரவிச்சந்திரன் விஜிதா

பிறப்பு: 1973.03.22
இறப்பு: 2021.06.27

உரும்பிராய் வடக்கு,
ச.ச.ச.நிலையம் உரும்பிராய்.

குடும்பத்தினர்.

(C-3640)


# இராசிபலன்

27.01.2022
தை 14, வியாழக்கிழமை
தசமி முன்னிரவு 11.06 மணிவரை

அனுசம் பின்னிரவு 4.22 மணிவரை
சுபநேரம் 8.06-9.36 மணிவரை
இராகுகாலம் 2.06-3.36 மணிவரை

சந்திராஷ்டமம்: அச்சுவினி

வளவன்

**மேஷம்:** குடும்பத்தில் குழப்பங்கள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வீண் விரயங்களைத் தவிர்ப்பது நல்லது, எடுத்த காரியங்களில் தடை தாமதங்கள் ஏற்படலாம்.

**கடகம்:** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்:** புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்.

**மகரம்:** வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**ரிஷபம்:** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், கடன் தொல்லைகள் அகலும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும். செய் தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**சிம்மம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்:** அன்பு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும், வசதி வாய்ப்புகளைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், அருமையான நாள், செய் தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**மிதுனம்:** பிறர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், உற்சாகத்துடன் பணிபுரியும் நாள், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், வியாபார விருத்தியுண்டு.

**கன்னி:** உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், உடன் பிறப்புகள் [illegible] ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**தனுசு:** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, தேக நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், பயணங்களால் [illegible]ின் சந்திப்பு இடம் பெறலாம், [illegible]விரயங்கள் கூடும் நாள்.

**மீனம்:** திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், மனக்குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள், கடுமையான எதிர்ப்புக்கள் கூட திடீரென சாதகமாகிவிடும்.


ஒருவரின் அறிவு நிலைக்கு ஏற்ப ஆசை செயற்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கல்விப் பொது தராதர சாதாரண தரத்தில் கல்வி கற்று இறுதியாக நடைபெற்ற பரீட்சையில் அதிதிறமைச் சித்திகளை பெற்ற மாணவர்களின் உயர்தர கல்வியை ஊக்குவிக்கும் வகையில் கல்லூரியின் 1987 ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களது நிதிப்பங்களிப்புடன் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ரி.மங்களேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். (படங்கள்- சிவசாந்தன்)

# வேகக் கட்டுப்பாட்டை இழந்து மதிலுடன் மோதிய கார்



(யாழ்ப்பாணம்)

யாழில் மருத்துவர்கள் பயணம் செய்த சொகுசு வாகனம் ஒன்று வேகக் கட்டுப்பா ட்டை இழந்து வீட்டு மதிலுடன் மோதி விபத்துக்கு உள்ளானது.

குறித்த விபத்தில் வாகனம் கடுமையான சேதங்களுக்கு உள்ளான நிலையில், அதில் பயணித்தவர்கள் தெய்வாதீனமாக சிறு காயங்களுடன் தப்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் அரியாலை - மாம்பழம் சந்திக்கு அருகில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, யாழ்ப்பாணம் ஏ-9 வீதியில் வேகமாக பயணித்த குறித்த வாகனம் அரியாலை மாம்பழம் சந்திக்கு அருகில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீடொன்றின் மதிலுடன் மோதி தடம்புரண்டது.

அதனை அடுத்து அவ்விடத்தில் கூடியவர்கள் விபத்தில் சிக்கிய வாகனத்தில் இருந்தவர்களை மீட்டெடுத்தனர். அவர்கள் சிறு காயங்களுக்கு உள்ளாகி இருந்தனர்.

அதனை அடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார், விபத்துக்கு உள்ளான வாகனத்தை பொலிஸ் நிலையம் எடுத்து சென்றதுடன் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (5-6-18-33)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமானதொரு வாழ்வு வாழ வேண்டி, இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில் நாளை 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு கிளிநொச்சி தருமபுரம் முத்துமாரி அம்மன் ஆலயத்தின் பிரதம குருக்கள் சாம ஸ்ரீதேசமாணி சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீகாந்தராசக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பாக இடம்பெறும். (5-6)



பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் நிதி ஒதுக்கீட்டில் தென்மராட்சி -தனங்கிளப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு கடந்த 23 ஆம் திகதி போட்டோ பிரதி இயந்திரம் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், சாவகச்சேரி பிரதேச சபையின் உப தவிசாளர் செ.மயூரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்:-சுபேசன்)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் 2022 ஆம் ஆண்டு பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு சங்கத் தலைவர் க.ஜினதாஸ் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெற உள்ளது.

எனவே ஒவ்வொரு கழகங்களிலிருந்தும் 2 பிரதிநிதிகளை மாத்திரம் கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (5)

# வெளிவந்துவிட்டது 'கலைமுகம்'

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தின் கலை இலக்கிய சமூக காலாண்டு இதழான 'கலைமுகம்' 73 ஆவது இதழ் அண்மையில் வெளிவந்துள்ளது.

இதில் ந.மயூரரூபன் எழுதிய ''அதிகாரத்தின் அருகில் கத்திகள்'' கட்டுரை மற்றும் அலெக்ஸ் பரந்தாமனின் ''ஒரு பிடி அரிசி'' சிறுகதை என்பனவும் இடம்பெற்றுள்ளன. (5)




# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 500 | 370 | 450 |
| உருளைக்கிழங்கு | 160 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 450 | 250 | 400 |
| தக்காளி | 200 | 180 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 70 | 50 |
| கோவா | 200 | 220 | 240 |
| கரட் | 420 | 440 | 500 |
| பூசணி | 130 | 140 | 160 |
| புடோல் | 220 | 180 | 200 |
| வாழைக்காய் | 80 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 240 | 260 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 220 | 250 |
| பாகற்காய் | 400 | 300 | 400 |
| வெண்டிக்காய் | 240 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 400 | 500 | 500 |
| லீக்ஸ் | 250 | 220 | 300 |
| பீற்றூட் | 300 | 360 | 360 |
| கறிமிளகாய் | 500 | 550 | 600 |
| முருங்கைக்காய் | -- | 800 | 1000 |
| போஞ்சி | 400 | 360 | 500 |
| கத்தரிதம்புள்ள | 300 | 300 | 400 |
| கீரை - 1 பிடி | 70 | 80 | 80 |
| தேசிக்காய் | 150 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 70-100 |
| இராசவள்ளி | 240 | 180 | 220 |
| வெங்காயப்பூ | 200 | 250 | 300 |
| முள்ளங்கி | 80 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 40 |
| ஈரப்பலா | 100 | 60 | 140 |



யாழ்ப்பாணம் நாவாந்துறை பகுதியில் புனரமைக்கப்பட்ட ஆயுர்வேத மருத்துவமனையை யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் நேற்றுப் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார். யாழ்.மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதி ஆணையாளர், செயலாளர் மற்றும் யாழ்.மாநகர சபை உறுப் பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

(படம்:- [illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுடனான அரசியல் தீர்விற்கு இடமில்லை

## கோட்டாவின் கொள்கை உரையில் கூறப்பட்டது இதுவே என்கிறார் உருத்திரகுமாரன்

(லண்டன்)

**தமிழ் மக்களின் தேசிய பிரச்சினை தொடர்பில் தனது கொள்கை உரையில் ஜனாதிபதி இருட்டடிப்பு செய்தமை யானது தமிழர்களுடன் எவ்வகை அரசியல் தீர்வுக்கும் இடமில்லை என்ற உண்மையை மீள உறுதி செய் துள்ளது.**



தனது பதவிக் காலத்தில் எவ்வழிவிலும் மனிதவுரிமை மீறல்களை ஆதரிக்கவில்லை. எதிர்காலத்திலும் இத்தகைய எவ்விதச் செயலுக்கும் இடமளிக்க மாட்டோம். இத்தகைய செயற்பாடுகளை எவ்வகையிலும் மன்னிக்க மாட்டோம் என சூளுரைத்திருந்த இலங்கை ஜனாதிபதிக்கு துணிவிருந்தால், அனைத்துலக பொறுப்புக் கூறல் செயல்வழி இயங்க முதலில் இடமளிக்கட்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் சவால் விடுத்துள்ளார்.

கடந்த 18 ஆம் திகதி இலங்கை பாராளுமன்ற அமர்வின் தொடக்கத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆற்றிய உரை தொடர்பில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கும் பன்னாட்டுக் குற்றங்களுக்கும் ஆளுருவமாக ஓர் இனப்படுகொலையாளி கோட்டாபய இருக்கிறார்.

இவர் தனது உரையில் தமிழ்த்தேசிய இனப் பிரச்சினையை அறவே இருட்டடிப்புச் செய்ததானது தமிழர்களுடன் எவ்வகை அரசியல் தீர்வுக்கும் இடமில்லை என்ற உண்மையையே மீளுறுதி செய்துள்ளது.

சர்வதேசக் குற்றங்களுக்கு நீதியினையும் பொறுப்புக் கூறலையும் வலியுறுத்தியே, ஐ.நா. மனித உரிமைச்சபை ஆணையாளர் மிச்சேல் பச்லட் அம்மையார் இலங்கையை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தில் கொண்டு நிறு த்தும்படி பரிந்துரைத்தார்.

அவரது அழைப்புக்கு ஐ.நாவின் முன்னாள் ஆணையார்கள், ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர்கள் பலரும் ஆதரவு தெரிவித்தனர் எனவும் பிரதமர் வி.உருத்திரகுமாரன் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

## நாட்டில் மீண்டும் தீவிரமடையும் கொரோனா பரவல்

### 95 சதவீதமானோர் ஒமிக்ரோன் தொற்றாளர்கள்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் தற்போது அடையாளங்காணப்படும் கொவிட் - 19 வைரஸ் தொற்றாளர்களில் 95 சதவீதமானோர் திரிபடைந்த ஒமிக்ரோன் தொற்றுக்குள்ளாகியிருக்கக்கூடும் என்று சுட்டிக் காட்டியுள்ள சுகாதாரத் தரப்பினர், பாடசாலை மாணவர்கள் தொற்றுக்குள்ளாகும் வீதம் அதிகரித்து வருவதாகவும் தெரிவித்தனர்.

நாட்டில் இதுவரையான காலமும் கட்டுப்பாட்டிற்குள் இருந்த கொரோனா வைரஸ் பரவல் தற்போது மீண்டும் தீவிரமடைந்து வருகிறது.

அதாவது கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானோரிடமிருந்து பெறப்பட்ட மாதிரிகளைப் பரிசோதனைக்குட்படுத்தும் போது அவற்றில் 95 சதவீதமான மாதிரிகளில் ஒமிக்ரோன் திரிபு அடையாளங்காணப்பட்டுள்ளது.

இதன்மூலம் நாட்டில் கண்டறியப்படும் தொற்றாளர்களில் 95 சதவீதத்திற்கும் அதிகமானோர் ஒமிக்ரோன் தொற்றுக்குள்ளாகியிருப்பதாகக் கூறமுடியும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

## எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் செயற்பாடுகளை ஆரம்பிப்பதில் தாமதம்

(கொழும்பு)

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பது மேலும் தாமதமாகும் என எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகள் இன்று முதல் மீள ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும் கச்சாய் எண்ணெய் கொண்ட கப்பல் வருவதில் தாமதம் ஏற்பட்டதால் இத்தாமதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>கி.பா: 38 சூரி 12 செவ் 2 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: பிரான்ஸ் PR; உண்டு<br>எதிர்பார்ப்பு: உள்நாட்டு படித்த பெண்<br>தொ.இ: B/12206 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 54 சூரி 7 செவ் 8 இல் உயரம்:4'11"<br>தகைமை/தொழில்: கணக்காளர்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்தவர் .<br>தொ.இ:G/8020 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம் உத்திரட்டாதி 2<br>கி.பா: 40 சூரி 9 செவ் 7 இல் உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: O/L சாரதி<br>எதிர்பார்ப்பு: சாரதி<br>தொ.இ: B/12207 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: சூரி 7 செவ் 10 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: மருத்துவர் (MBBS)<br>எதிர்பார்ப்பு: உயர் பதவி வெளிநாடு விரும்பத்தக்கது<br>தொ.இ:G/8057 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 2<br>கி.பா:- சூரி 10 செவ் 11 இல் உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:O/L அவுஸ்திரேலியா PR இல்லை<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் கனடா விரும்பத்தக்கது<br>தொ.இ: B/12208 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>கி.பா: 68¾ சூரி 4 செவ் 7 உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு விரும்பத்தக்கது உள்நாடு ஆயின் சொந்த தொழில்<br>தொ.இ:G/8064 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 1<br>கி.பா: சூரி 6 செவ் 5 இல் உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSc,Bcs (லண்டன்) தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/12210 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 1<br>கி.பா: சூரி 6 செவ் 8<br>உயரம் :5'<br>தகைமை/தொழில்:H.N.D ,IT அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு லண்டன் அல்லது அரச தொழில்<br>தொ.இ:G/8087 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



சிவமயம்



இணுவில் திருவருள்மிகு

ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய

புனராவர்த்தன அஷ்டபந்தன நிகமோக்த நவகுண்டபக்ஷ மஹாயாக கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

**திருமுழுக்குத் திருமுகம் – 06.02.2022**

பிலவ வருடம் தைமாதம் 14 ஆம் திகதி 27.01.2022 வியாழக்கிழமை காலை 9.36 மணிக்கு கும்பாபிஷேக கிரியாரம்பம்

27.01.2022 வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு ஸ்ரீ வித்யாகணபதி ஆராதனை, கணபதிஹோமம், பேரீதாடனம்

எண்ணெய்க்காப்பு | 03.02.2022 வியாழன் பகல் 12.00 மணிமுதல் 04.02.2022 வெள்ளி இரவு 10.00 மணி வரை

06.02.2022 காலை 8 மணிக்கு மேல் 8.45 இற்குள் வரும் கும்பலக்கினத்தில் ஸ்தூபிகள் கும்பாபிஷேகம் தொடர்ந்து பிரதான கும்பங்கள் வீதி பிரதட்சிணம் 8.47 இற்கு மேல் 10.26 மணிக்குள் வரும் மீனலக்கின சுபமுகூர்த்தத்தில் மஹாகும்பாபிஷேகம்

இங்ஙனம்
விநாயகர் அடியார்கள்.

(C-3638)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனா பரவல் காரணமாக

# 61 கோடி மாணவர்கள் கல்வி கற்கும் வாய்ப்பினை இழந்துள்ளனர்

## யுனிசெப் தகவல்

(ஜெனிவா)

**கொரோனா காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டதால் உலகம் முழுவதும் சுமார் 61 கோடி மாணவர்கள் கல்வி கற்கும் வாய்ப்பை இழந்துள்ளனர் என சர்வதேச குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பான யுனிசெப் அமைப்பு தெரிவித்தது.**


குறித்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், 'பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமையினால் பல நாடுகளில் இலட்சக்கணக்கான குழந்தைகள் அடிப்படை திறன்களை பெறுவதற்கான வாய்ப்புகளை இழந்துள்ளதாகவும் அதனால் மன இறுக்கம், போதிய ஊட்டச்சத்து குறைவின்மை உள்ளிட்ட பல்வேறு இன்னல்களை குழந்தைகள் எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

10 வயதிற்குள்ளான குழந்தைகளில் 70 சதவீதம் பேர் சாதாரண வாசகங்களைக் கூட வாசிக்கக் கூடிய திறனற்று உள்ளதாகவும் பாடசாலையில் இடைநிற்றல் அளவு அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## இரவு விடுதியில் மோதல்

# 19 பேர் உயிரிழப்பு

## இந்தோனேசியாவில் சம்பவம்



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் மேற்கு பப்புவா மாகாணத்தில் உள்ள இரவு விடுதியில் ஏற்பட்ட சண்டை மற்றும் தீ விபத்தில் 19 பேர் உயிரிழந்தனர்.

இந்த சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்றது. முன்னதாக குறித்த இரவு விடுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தின் போது ஒருவர் குத்திக்கொல்லப்பட்டார்.

இதனையடுத்தே தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. கத்திகள் மற்றும் அம்புகளுடன் ஆயுதம் ஏந்திய இரண்டு போட்டி குழுக்களிடையில் இந்த மோதல் இடம்பெற்றுள்ளது.

இந்தோனசியாவின் நகரங்களில் இளைஞர்களிடையே சண்டைகள் இயல்பானவை,

எனினும் அது பல உயிரிழப்புகளை ஏற்படுத்தியது. இதுவே முதல் முறையாகும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (நி)

## உக்ரேய்ன் ஆக்கிரமித்தால் புடினுக்கு எதிராகத் தடை- அமெரிக்க ஜனாதிபதி



(வோஷிங்டன்)

உக்ரேய்னை ரஷ்யா ஆக்கிரமிக்குமாயின், ஜனாதிபதி விளாடிமிர் புடின் மீது தடை விதிப்பதற்கு உத்தேசித்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் தெரிவித்தார்.

ரஷ்யா தமது தென் மேற்கு எல்லையில் உள்ள நாட்டின் மீது நடவடிக்கை எடுக்குமாயின், பாரிய விளைவுகளை சந்திக்க நேரிடும.

ரஷ்யா மீது மேற்குலக நாடுகள் தொடர்ந்தும் எச்சரிக்கை விடுத்து வரும் நிலையில் அமெரிக்கா தடை குறித்து அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தேவையற்ற பதற்றத்தை தோற்றுவிப்பதாக ரஷ்யா குற்றஞ் சுமத்தியுள்ளது. (நி)

## 5 ஆவது ஏவுகணை பரிசோதனையை

# நடத்தியது வடகொரியா

(பியாங்யாங்)

வடகொரியா தொடர்ச்சியாக ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது.

சர்வதேச நாடுகளின் பொருளாதாரத் தடை மற்றும் கொரோனாத் தொற்று காரணமாக வடகொரியாவின் பொருளாதார நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் அந்த நாடு பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தாமல் தொடர்ச்சியாக ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது.



இந்த நிலையில் நேற்று முன்தினம் ஒரேநாளில் 2 ஏவுகணைகளை சோதனை செய்துள்ளது.

இது, வடகொரியா இந்த மாதத்தில் மாத்திரம் நடத்திய 5 ஆவது ஏவுகணை சோதனை என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# இந்தியாவின் 73 ஆவது குடியரசு தின விழா நேற்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது



இந்தியாவின் 73 ஆவது குடியரசு தின விழா நேற்றுக் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. டில்லி ராஜபாதையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதமர் மோடி, குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந், மத்திய அமைச்சர்கள் மற்றும் முப்படை தளபதிகள் கலந்து கொண்டனர். இந்திய இராணுவத்தின் கம்பீரத்தை பறைசாற்றும் [illegible]யில் முப்படைகளின் அணிவகுப்பு டில்லி ராஜபாதையில் தொடங்கி இந்தியா கேட் வரை நடந்தது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது அரசியல் தீர்வு சமஷ்டி முறையில் இருக்க வேண்டும்

## பா.உ.வினோநோதராதலிங்கம்



(குருமன்காடு)

**தமிழ் அரசியல் கட்சிகளுக்குள் ஒற்றுமையில்லாமல் தொடர்ந்தும் பிளவுபட்டுக்கொண்டிருப்பது எமது தமிழ் கட்சிகளுக்குள் காணப்படும் மிகப்பெரிய சாபக்கேடு.**

எமது அரசியல் தீர்வு சமஷ்டி முறையில் இருக்க வேண்டும் என வன்னிப்பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

இன்று பாரத பிரதமர் மோடிக்கு எழுதிய கடிதம் உட்பட கடந்த காலத்தில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளருக்கு எழுதிய கடிதம் உட்பட பலவற்றிற்கு தமிழ்த்தேசியக்கட்சிகளை ஒற்றுமைப்படுத்தி அதன் மூலம் அந்த ஐக்கியத்தினை மேற்கொள்ள முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்த முயற்சிகள் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.

கடந்த அரசாங்கம் போலவே இந்த அரசாங்கமும் மீண்டும் மீண்டும் தமிழ்த்தேசியக்கட்சிகளை ஏமாற்ற முயற்சிக்கின்ற வேளையில் நாம் சர்வதேசத்தின் ஆதரவை பெற்றால்தான் இந்த நீண்ட புரையோடிப் போயிருக்கின்ற அரசியல் தீர்வாக இருந்தாலும் அல்லது இனப்பிரச்சினைக்கான நீடித்து நிலைக்கக் கூடிய தீர்வாக இருந்தாலும் அதற்கு சர்வதேசத்தின் தலையீடு இல்லாமல் மகிந்த,கோட்டா கூட்டு குடும்ப அரசாங்கம் எந்த தீர்வையும் வழங்காது என்பது இப்போது எமக்கு தெரிந்த விடயமாகவே உள்ளது.

ஆகவே நாம் ஒற்றுமைப்பட வேண்டும். இல்லாவிட்டால் எமக்கான தீர்வு எட்டாக்கனியாவே இருக்கும். அவ்வாறு ஒற்றுமையாக செயற்பட்டால் தான் எமது மக்களுக்கான தீர்வை பெற சர்வதேசத்தின் ஆதரவுடன் பயணிக்க முடியும். இல்லாவிட்டால் தொடர்ந்தும் நாம் ஒவ்வொரு விடயத்திற்கும் போராட வேண்டிய நிலைதான் ஏற்படும்.

தமிழ் அரசியல் கட்சிகளுக்குள் ஒற்றுமையில்லாமல் தொடர்ந்தும் பிளவுபட்டுக் கொண்டிருப்பது எமது தமிழ் கட்சிகளுக்குள் காணப்படும் மிகப்பெரிய சாபக்கேடு. தமிழ்த் தேசியப்பரப்பில் உள்ள தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றாக, ஒற்றுமையாக சாத்தியமான யதார்த்தமான தற்போது தமிழ் மக்களுக்கு என்ன தேவையோ அதனை முன்னிறுத்தி தற்காலிகமாகவேனும் ஒரு தீர்வை எட்ட வேண்டும் என்பதற்காக 13 ஆவது திருத்த சட்டத்தினை அமுல்படுத்த வேண்டும் என கோரியும் எமது அரசியல் தீர்வு சமஷ்டி முறையிலாக இருக்க வேண்டும். அதுவே எமது இலக்கு என்பதனை கூட்டிக்காட்டியும் அனைவரும் கையெழுத்திட்டு இந்திய பிரதமருக்கு கடிதம் அனுப்பும் அதேவேளை அதனை குழப்புவதற்காக ஏதோவொரு திரைமறைவு அரசியல் நிகழ்ச்சிக்கு பின்னால் நின்று கொண்டு சில கட்சிகள் செயலாற்றுகின்றன.

எனினும் நாம் அர்ப்பணிப்புடன் இதில் செயற்படுவதனால் அவர்களுடைய முயற்சிகளை உடைத்தெறிவோம். எமது மக்களின் விடுதலைக்காக நாம் ஒற்றுமைப்பட்டு செயற்படுவோம் என அவர் தெரிவித்தார். (5-6-250)

## திறப்பு விழா

(குப்பிழான்)

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சிறிய கூட்டுறவுநகர் கட்டடத் திறப்பு விழா எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி சங்கத்தின் தலைமைக் காரியாலய வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ந.உமாகரன் தலைமையில் இடம்பெறவுள்ள விழாவில் யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (5-6-18)

## சாவகச்சேரியில் கைக்குண்டு மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் வடக்கு பாடசாலை வீதியில் அமைந்துள்ள காணி ஒன்றிலிருந்து நேற்று கைக்குண்டு ஒன்று அடையாளம்காணப்பட்டுள்ளது.

காணி துப்புரவு செய்யப்பட்ட போதே குறித்த கைக்குண்டு அடையாளம்காணப்பட்ட நிலையில் இச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் காணி உரிமையாளரினால் முறைப்பாடு செய்யப்பட்டது. கைக்குண்டினை மீட்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்தனர். (5-6-30)

## மோ.சைக்கிள்-பாரவூர்தி விபத்து பெண் படுகாயம்

(குருமன்காடு)

வவுனியா, மருத்துவமனை சுற்று வட்ட வீதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இவ் விபத்து குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா நகரப் பகுதியில் இருந்து துவிச்சக்கர வண்டியில் பயணித்த பெண் ஒருவர் மருத்துவமனை சுற்று வட்ட வீதி ஊடாக பூந்தோட்டம் வீதிக்கு செல்ல முற்பட்ட போது, வவுனியா நகரில் இருந்து வந்த பாரவூர்த்தியுடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த பெண் காயமடைந்து வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (5-6-250)



சங்கானை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட முன்பள்ளிகள், சனசமூக நிலையங்கள், இளைஞர் கழகங்கள் மற்றும் விளையாட்டு கழகங்கள் என்பனவற்றிற்கு பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்கினேஸ்வரனால் விளையாட்டு உபகரணங்கள், இலத்திரனியல் சாதனங்கள், தளபாடங்கள் என்பன நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

2021 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து குறித்த உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன. (படங்கள் : கஜிந்தன்)



சர்வதேச ரீதியில் தங்கப்பதக்கத்தை வென்று வடமாகாணத்துக்கு பெருமை சேர்த்த முல்லைத்தீவு வீராங்கனை இந்துகாதேவிக்கு நியூ லலிதா நகைமாளிகை தங்க நகை பணப்பரிசிலும் வழங்கி கௌரவித்தது. அத்துடன் மற்றைய வெற்றியாளர்களுக்கும் பணப்பரிசில்கள் வழங்கப்பட்டன. (5-6-33)

## மீண்டும் அதிகரிக்கும் கொரோனா மக்களை எச்சரிக்கும் சுகாதாரப்பிரிவு

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைய நாட்களாக கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதனால் பொதுமக்களை அவதானமாகவும், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியும் நடந்துகொள்ளுமாறு மாவட்ட சுகாதார பிரிவினர் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளனர். கடந்த திங்கட்கிழமை 66 தொற்றாளர்களும், நேற்று முன்தினம் 40 தொற்றாளர்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் இனம் காணப்பட்டுள்ளனர்.

பரிசோதனைக்கு உட்படுத்திய நிலையில் மேற்படி எண்ணிக்கையான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எனினும் சமூகத்தில் இதனைவிட அதிகளவான தொற்றாளர்கள் காணப்படலாம். எனவே பொதுமக்கள் கண்டிப்பாக சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறும் கேட்டுக்கொண்டுள்ள சுகாதார பிரிவினர் மாவட்டத்தில் பெரும்பாலான பொதுமக்கள் எவ்வித கொவிட்-19 சுகாதார நடைமுறைகளை பின்பற்றாது நடந்து கொள்வதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

ஒமிக்ரோன் தொற்று அதிகளவில் வேகமாக பரவி வருவதனால் பொதுமக்கள் விழிப்புணர்வுடன் நடந்துகொள்ளுமாறு மாவட்ட சுகாதார தரப்பினர் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளனர். (5-6-316)

## மருத்துவம், குடிநீர் வசதிகளை பெற்றுத் தருமாறு மக்கள் கோரிக்கை

(தருமபுரம்)

"பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் வட்டாரங்களுக்கான சந்திப்பு" நேற்று முன்தினம் தருமபுரம் பொது அமைப்பு பிரதிநிதிகளுடன் இடம்பெற்றது.

இச்சந்திப்பில் மக்களின் பல்வேறு தேவைகளையும் தெரிவித்ததுடன் அவற்றுக்கான தீர்வினை விரைவில் பெற்றுத்தர வேண்டுமென்றும் பொது அமைப்பினர் தெரிவித்தனர்.

அந்த வகையில் தருமபுரம் மருத்துவமனையின் மருத்துவர் பற்றாக்குறை மற்றும் போதிய வசதிகள் இன்மை போன்ற குறைகள் முன்வைக்கப்பட்டன.

இம்மருத்துவமனையை நம்பி 14 இற்கும் மேற்பட்ட கிராம மக்கள் இருப்பதாகவும் இவர்களுக்கான மருத்துவ சேவையினை இம் மருத்துவமனை பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனிடம் கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன் வீதிப்புனரமைப்பு மற்றும் குடிநீர் விநியோகத்தையும் மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர். 0

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இளையோரின் ஏற்றத்திற்கான எமது முயற்சியைக் கொச்சைப்படுத்தாதீர்கள்

## கம்பவாரிதி இ.ஜெயராஜ்



உயர் ஆளுமை பெற்று நம் இளையோர் உயர்வு பெற வேண்டும் எனும் நோக்கோடு அண்மையில் கிளிநொச்சியில் நாம் ஆரம்பித்த புதிய முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்.பல்கலைக்கழக இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டினை இணைய வெளியில் பார்க்க முடிந்தது. அதுபற்றி எமது கருத்தினை மக்களரங்கில் பகிர்ந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து இக்கட்டுரையை வரைகிறேன்.

அங்கு பேசிய மாணவர், நாங்கள் மாணவர்களுக்கு இராணுவ முகாம்களில் பயிற்சி அளிக்கப்போவதாகவும், அது நம் மாணவர்களின் சுயாதீனத்தை கெடுத்து தேவையற்ற அழுத்தங்களை உண்டாக்கிவிடப் போகிறது எனவும் விசனப்பட்டிருந்தார். அண்மையில் நடந்த அடிக்கல் நாட்டு விழாவில், நான் நிகழ்த்திய உரையின் ஒரு சிறு பகுதியை மட்டும் பிரமாண்டமாகப் 'போக்கஸ்' செய்தும், மற்றைய என் கருத்துக்களை முற்றாக 'எடிட்' செய்தும் மிகவும் புத்திசாலித்தனமாக எமது முயற்சியை சமூகத்தின் முன் பிழையாகப் பதிவு செய்ய அவர் முயன்றார்.

அவருடைய அந்தக் கீழ்மையான முயற்சியைக் கண்டு மனவருத்தமுறுகிறோம். இது ஒட்டுமொத்த மாணவர்களின் கருத்து அன்று என்பதையும் இம்மாணவர் யாருடையதோ தூண்டுதலால்தான் அவசர அவசரமாக இக்காரியத்தைச் செய்ய முனைந்தார் என்பதையும் நன்கு உணர்கிறோம்.

நம் இனத்தின் அடுத்த தலைமுறையை வழிநடத்தப் போகிற கற்ற இளையோரேனும் நிமிர்வோடும் நிதானத்தோடும் தமது சொந்த புத்தியால் நடந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம். அன்றைய மாணவரின் உரையில் உண்மையை அறிந்து வெளிப்படுத்தும் நோக்கம் இருக்கவில்லை. சமூகத்தை, எமக்கு எதிராகத் தூண்டும் முயற்சி மட்டுமே இருந்தது. அது இளையோர் மீது நம்பிக்கை கொண்ட எமக்கு பெரும் ஏமாற்றத்தைத் தந்தது.

அந்தப் பத்திரிகை மாநாட்டை நடத்துவதற்கு முதல், அம்மாணவ நண்பர் எங்களோடு தொடர்பு கொண்டு, நாம் என்ன செய்ய நினைத்திருக்கிறோம் என்பதைக் கேட்டு அறிந்திருக்க வேண்டும். அதனைச் செய்யாமல் வெறும் ஊகத்தின் அடிப்படையில் ஒரு செய்தியை உருவாக்கிக் கொண்டு, நாம் செய்ய நினைக்கும் நற்காரியத்தை ஏதோ 'இனதுரோகம்' செய்வதுபோல் வர்ணித்து பேசியிருந்தார். 'மூட்டைப்பூச்சிக்கு துப்பாக்கி எடுத்த கதை' யாய் அவசரப்பட்டு நண்பர் நடாத்திய பத்திரிகை மாநாடு வேடிக்கைக்குரிய ஒன்றாய் அமைந்தது. தமக்குச் சார்பாய், கிடைத்த ஒரு புள்ளியை வைத்து அவசர அவசரமாக கோலம் போட்டுவிட வேண்டும் என்று நினைக்கும் சில கீழ்த்தரமான அரசியல்வாதிகளின் வேகமே அவரது செயலில் வெளிப்பட்டது.

கம்பன் கழகம், கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக எங்களுடைய தமிழ்ச் சமூகத்துடன் இணைந்தே பயணித்திருக்கிறது. எமது கழகத்தின் முயற்சிகளின் தூய்மையை நமது தமிழ்ச் சமூகம் நன்கு அறியும். இன்றுவரை எமது கழகம் செய்யும் முயற்சிகளின் வெற்றிக்கு நம் சமூகம் தரும் ஆதரவும், அன்புமே காரணமாயின. இன்று எமது கழகத்தின் சாதனையாய்ச் சொல்லப்படும் விடயங்கள் அனைத்தும் எம்மக்கள் தந்த ஆதரவால் நிகழ்ந்தவையே. அந்த நன்றியை நானும் எமது கழகமும் என்றும் மறக்கப்போவது இல்லை.

முன்னைய கூட்டணித் தலைவர்கள், அதன்பின் வந்த போராளித் தலைவர்கள் தற்போதைய நம் அரசியல் தலைவர்கள் என அனைவருமே, இதுவரை எம் கழகத்தைக் கண்ணியப்படுத்தியே வந்திருக்கிறார்கள். அன்று நாம் நடாத்திய அடிக்கல் நாட்டு விழாவில், முரண்பாடுடைய அனைத்துத் தலைவர்களும் கட்சி பேதமின்றி ஒன்றிணைந்து வந்ததே மேல் உண்மைக்கான தக்க சாட்சியாம்.

போராட்ட காலத்தில் பலவாகப் பிரிந்திருந்த போராளிக் குழுக்கள் அனைத்துமே கூட, எங்கள் மீதான மதிப்பினைப் போற்றியே வந்தன. எங்களை வீழ்த்த வேண்டும் என நினைத்த சிலர், புலிகளுக்கும் எங்களுக்கும் பெரிய பிரச்சினைகள் உண்டானதாய், கற்பனைக் கதைகள் பலவற்றைக் கட்டி மகிழ்ந்தார்கள். இன்றும் மகிழ்கிறார்கள். ஆனால் அதை வைத்து எம்மை வீழ்த்த நினைத்த அவர்களின் முயற்சி கைகூடவில்லை.

நாம் புலிகளோடு சில முரண்பாடுகளைக் கொண்டிருந்தது பகிரங்கமான விடயம். அம் முரண்பாடுகள் எங்களின் கொள்கை சார்ந்தவை மட்டுமே. சில விட்டுக் கொடுப்புக்களை நாம் செய்யாததால் அவர்கள் எம்மேல் அதிருப்தியுற்றிருந்தார்கள். அவ்வளவே! ஆனால் அவர்கள் கடைசிவரை எம்மைக் கௌரவத்தோடுதான் நடத்தினார்கள்.

அக்காலத்தில் இருந்த புலிகளின் அதிகாரத்தோடு ஒப்பிடும்போது, நாங்கள் புள்ளியளவானவர்களாய்க்கூட இருக்கவில்லை. அவர்கள் நினைத்திருந்தால், இவர்களைப் போல ஏதாவது இல்லாத பழிகளைச் சொல்லி எங்களைத் துடைத்தெறிந்திருக்க முடியும். அவர்கள் அப்படிச் செய்யாததே எம்மேல் அவர்கள் கொண்ட மதிப்புக்கான சாட்சியாய் இருந்தது.

புலி உறுப்பினர் சிலருடன் ஏற்பட்ட ஒரு சில கருத்து [illegible] 'இனி இந்த [illegible] பேசமாட்டோம்' என நாம் பகிரங்கமாய் அறிவித்த போது, அதனை தங்கள் இயக்கத்திற்கு நாம் விடுத்த சவாலாய்க் கொள்ளாமல், ஒன்றுக்கு மூன்றுதரமாய் தமது புலனாய்வு உறுப்பினர்களை அனுப்பி எம்மை மீண்டும் பேச வேண்டும் என அவர்கள் திரும்பத் திரும்ப வேண்டிக் கொண்டனர்.

ஆனால் நாமோ,'எமக்கு நேர்மையான தீர்வு கிடைக்கும் வரையும் பேசப் போவதில்லை' என பிடிவாதம் பிடிக்க, யாழ்.மண்ணுக்குள் இராணுவம் புகத்தொடங்கியிருந்த அந்த இக்கட்டான வேளையில்கூட, நேரம் ஒதுக்கி புலிகளின் புலனாய்வுத் துறைத் தலைவர் பொட்டம்மான் என்னை நேரில் சந்தித்து நடந்த பிரச்சினைகள் பற்றிக் கேட்டறிந்தார்.

புலிகளுக்கும் எங்களுக்கும் கடும் முரண் இருந்ததாகப் பேசப்பட்ட காலகட்டத்தில் கூட, திலீபனின் நினைவுக் கூட்டத்தின் இறுதி நாளன்று, எங்கள் கழகத்தாரை அழைத்தே அவர்கள் பட்டிமண்டபம் நடத்தினார்கள். நல்லூர் வீதியில்,பெரும் சனத்திரளுக்குக்கிடையில் நடந்த அக்கூட்டத்தில், புலிகளின் ஆதரவாளர்களின் சில செயல்களை நான் கடுமையாகக் கண்டித்துப் பேசினேன். அப்போது என் கருத்துப் பற்றி யாழ்ப்பாணம் முழுவதும் பரவலாகப் பேசப்பட்டது. ஆனால் அப்பேச்சில் நான் சொன்ன விடயங்களை அவர்களது தலைமை ஏற்றுக் கொண்டமையை அடுத்த திலீபனின் விழாவில் காண முடிந்தது.

இடம்பெயர்ந்து நாங்கள் இருந்த போது, கொழும்பு செல்ல ஒருவருக்கும் 'பாஸ்' வழங்காத அன்றைய நிலையில் எனக்கும் கழக நண்பர்களுக்கும் பாஸ் தந்து அவர்கள் மதிப்பளித்தார்கள். அதுமட்டுமல்லாமல், புலிகளின் கடைசி 'சென்ரி' யைத் தாண்டி வவுனியாவுக்குள் செல்ல நாம் முயன்றபோது, ஒரு புலி நண்பன் என்னை தனியே அழைத்து 'இந்த நேரத்தில் நீங்கள் கொழும்பு செல்வது புத்திசாலித்தனம் இல்லை' என்று எம் நன்மை நோக்கித் தடுத்தான். பின்னர் எம் தேவையை நான் உணர்த்த, அதை ஏற்றுக்கொண்டு எங்களைப் போக அனுமதித்தான்.

தற்போது இவர்கள் உண்டாக்கியிருக்கும் பிரச்சினையில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கான முயற்சியாய் இவர், தமக்கு 'புலிச்சாயம்'பூச முயல்கிறார் என சிலர் உரைக்கலாம். அப்படிச் செய்ய நான் ஓர் அரசியல்வாதி அல்ல. இவை பற்றியெல்லாம் எனது 'உன்னைச் சரணடைந்தேன்' எனும் நூலில் எப்போதோ நான் தெளிவாக எழுதியிருக்கிறேன். இப்போது இவற்றை நினைவூட்டுவதன் காரணம் எங்கள் மீது பழிதூற்ற, எங்களோடு சில விடயங்களில் முரண்பட்டிருந்த புலிகள்கூட முன்வரவில்லை என்பதை உணர்த்தவேயாம்.

இப்படியாய், அரைநூற்றாண்டை அண்மிக்கும் எமது பொது வாழ்வின் உயர்ந்த நோக்கத்தை, வரலாறு அறியாமல் குறித்த அந்த நண்பர் சிதைக்க முற்பட்டிருக்கிறார்.

இன்றுவரை எமது கழகத்தின் முயற்சிகளை நம் தமிழினத்தின் உயர்வு நோக்கியே நாம் நகர்த்தி வந்திருக்கிறோம். நமது சமூக உயர்வுக்காய் செய்யப்படும் நல்ல விடயங்களை பகிரங்கமாய் பாராட்டவும், இனத்தின் வீழ்ச்சிக்காய் செய்யப்படும் தீய விடயங்களை எவருக்கும் அஞ்சாமல் கண்டிக்கவும் நாம் என்றும் தவறியதில்லை. இது உலகறிந்த உண்மை.

வரலாறு இப்படியிருக்க, எமது கம்பன் கழகம் இளையோரை இராணுவத்தின் வயப்படுத்த முயல்வதாய் அந்நண்பர் பேசியிருப்பது சமூகத்தோடு தொடர்பில்லாத அவரது நிலையையே வெளிப்படுத்துகிறது. போராட்டங்களின் மூலம் தன் இருப்பை நிலைநிறுத்த அந்நண்பர் விரும்பினால், அதற்கு நம் சமூகத்தில் வேறு எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சவேந்திரசில்வா மீதான தடை குறித்து பிரித்தானியாவின் நிலைப்பாட்டைக் கோரும்

# தொழிற்கட்சி உறுப்பினர்

**(கொழும்பு)**

**இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு அமெரிக்கா பயணத் தடை விதித்துள்ள நிலையில் தடை குறித்து பிரித்தானியாவும் பரிசீலிக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**



தொழிற் கட்சியின் உறுப்பினர் சியோபைன் மெக்டொனாக் நேற்று முன்தினம் அமெரிக்காவின் பயணத் தடை குறித்து பிரித்தானியாவின் நிலைப்பாட்டை கோரியுள்ளார்.

கடந்த ஆண்டு பெப்ரவரியில், போர்க்குற்றங்களை மேற்கோளிட்டு ஜெனரல் சில்வா மற்றும் அவரது குடும்பத்தினர் மீது அமெரிக்கா பயணக் கட்டுப்பாடுகளை விதித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# கோழி இறைச்சி, முட்டை விலைகளில் வீழ்ச்சி

(கொழும்பு)

அண்மைய காலங்களில் சந்தையில் அதிகரித்திருந்த கோழி இறைச்சி மற்றும் முட்டை என்பனவற்றின் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளன.

27 ரூபாய் வரையில் அதிகரித்திருந்த முட்டை விலை, தற்போது 21 ரூபாய் வரையில் வீழ்ச்சியடைந்துள்ளதாக, கால்நடை வளங்கள், பண்ணை மேம்பாட்டு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சர் டீ.பி.ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் முட்டை உற்பத்தியை அதிகரிக்க, தீர்வை வரியின்றி விலங்கு உணவை இறக்குமதி செய்ய நிதி அமைச்சர் அனுமதி வழங்கியுள்ளார். இதற்கமைய, தீர்வை வரியற்ற விலங்குணவுகள் கொண்டுவரப்பட்டு, பண்ணைகளுக்கு அவை வழங்கப்பட்டுள்ளன.

எனவே, உற்பத்தியாளர்கள், இறைச்சி மற்றும் முட்டை என்பனவற்றின் விலைகளை தாமாகவே குறைத்துள்ளனர் என இராஜாங்க அமைச்சர் டீ.பி.ஹேரத் தெரிவித்தார். (நி)

# மாணவியும் இளைஞனும் சடலமாக மீட்பு

(கொழும்பு)

பாடசாலை மாணவி ஒருவரும் இளைஞன் ஒருவரும் தென்னிலங்கையில் சடலமாக மீட்கப்பட்டமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கரந்தெனிய, பொஹெம்பியகந்த பிரதேசத்தில் பலா மரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் குறித்த இருவரும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் 16 வயதுடைய பாடசாலை மாணவியும் 20 வயதுடைய இளைஞரும் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் பொஹெம்பியகந்த பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என தகவல் வெளியாகியுள்ளது. இது தற்கொலையா? அல்லது கொலையா? என விசாரணை நடத்தி வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி)

# தமிழக மீனவர்களின் படகுகள்

## ஏலமிடும் தீர்மானத்திற்கு வைகோ கண்டனம்

(கொழும்பு)

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டதாகக்கூறி இலங்கை கடற்படையால் கைப்பற்றப்பட்ட தமிழக மீனவர்களின் படகுகள் ஏலமிடப்பட உள்ளதாக வெளியான அறிவிப்பு கண்டனத்திற்குரியது என மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்தார்.



இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் கைப்பற்றப்பட்ட தமிழக மீனவர்களின் 105 படகுகளை, எதிர்வரும் பெப்ரவரி 5 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதிவரை 5 இடங்களில் ஏலமிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அது குறித்து வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் தமது கண்டனத்தை தெரிவித்தார்.

உடனடியாக இந்திய மத்திய அரசு இதில் தலையிட்டு மீன்பிடிப் படகுகள் ஏலமிடப்படுவதைத் தடுக்க வேண்டும்.

அத்துடன், இலங்கை அரசினால் இதுவரை பறிமுதல் செய்யப்பட்டுள்ள அனைத்துப் படகுகளையும் மீட்க வேண்டும் என வைகோ வலியுறுத்தினார். (நி)

## இன்று ஒரு தகவல்

# நேரமும் தரமும்

நேரத்தை மிச்சம் பிடிக்க எண்ணுகிறவர்கள் தரத்தைக் கோட்டை விட்டு விடுகிறார்கள்.

அதேபோல் தரத்தையே பார்ப்பவர்கள் நேரத்தைக் கோட்டைவிட்டு விடுகிறார்கள்.

அப்படியானால் நேரமும் தரமும் ஒன்றுடன் ஒன்று இணையாதவையா? அவை ஒன்றுக்கொன்று எதிரியா? இக்கேள்விகளுக்கு ஆம் என்று பதிலளிப்பவர்கள் நுனிப்புல் மேயும் இனத்தைச் சேர்ந்தவர்கள்.

நேரத்தையும் மிச்சப்படுத்தித் தரத்தையும் நம்மால் பாதுகாக்க முடியும்.

இங்கே தரம் என்ற சொல் முழுமையும் நிறைவையும் தரக்கூடிய எந்த ஒரு செயலையும் குறிப்பதாகும்.

வீட்டில் மெதுவாகக் குளிப்பார், மெல்லத் தலை வாருவார், அசைந்து அசைந்து அன்னம்போல் நடைபயில்வார், சாவகாசமாக சிரித்துப் பேசிக் கொண்டு சாப்பிடுவார், ஆனால்...

வாகனத்தில் ஏறி அமர்ந்து விட்டாலோ, விரட்டு விரட்டு என்று விரட்டுவார், வீதியில் அறைபட்டுச் சாவார்!

இப்படித் தன்னையும் அறியாமல் தற்கொலை செய்து கொள்ளும் தவறைத்தான் இன்று பெரும்பாலானோர் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அதாவது எங்கு—எதில்—எவ்வளவு நேரத்தைச் செலவிட வேண்டும் என்ற நிதானம் தெரியாமல் நடந்து கொள்கிறார்கள்.

தேவையற்ற விடயங்களில் பொழுதை விரயமாக்கி விட்டு தரத்தைக் காப்பாற்ற வேண்டிய நேரத்தில் நேரம் வீணாகிறது. வீணாகிவிட்டது என்று துடிக்கிறார்கள்.

அந்தப் பதற்றம் அவர்களை நிம்மதியாக வேலை செய்ய விடுவதில்லை.

விளைவு?

மற்றவர்களின் குற்றச்சாட்டுக்கு ஆளாகுமளவிற்குத் தரம் பாதிக்கப்படும்.

சிலர் வேறு வகையில் தவறிழைக்கிறார்கள். அதாவது அவர்கள் சிந்தனையையும் செயலையும் ஒருங்கிணைத்துக் குவிக்காமல் செய்யும் செயலை ஒருமைப்பாட்டின் மையக்கேந்திரமாக எண்ணாமல் திணறுவார்கள். இங்கேயும் நேரத்திற்கும் தரத்திற்குமிடையே போர் நடந்து இரண்டினுள் ஒன்று மடியத்தான் செய்யும்.

தேவையற்ற வேலைகளைச் செய்வதைக் குறைத்துக் கொள்வதன் மூலமும் நம்மால் நேரத்தை மிச்சப்படுத்த இயலும்.

ஆனால், தரத்தின் இழப்பு தகுதிக்கே ஆபத்தை உண்டாக்கிவிடும். ஆக, நம்முடைய தவறான அனுமானங்களைச் சரிசெய்து கொண்டு குளறுபடியான கொள்கைகளையும் நடைமுறைகளையும் மாற்றிக்கொண்டு செய்யும் செயலிலேயே முழுச் சிந்தனையுடன் ஈடுபட்டால்,

நேரமும் தரமும் இணைந்து நடந்து வெற்றிப் பாதைக்கு நம்மைக் கைகோர்த்து அழைத்துச் செல்லும்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அறிவாளி

விஜயபுரத்தை மன்னன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் பெயர் மதிவதனர்.

அவனுடைய அரசவையில் இருந்த மூத்த அமைச்சர்களில் ஒருவர் திடீரென மரணம் அடைந்தார். எனவே, அந்தப் பதவி காலியாகவே இருந்தது.

அதற்கு தகுதி வாய்ந்த இளைஞன் ஒருவனை நியமிக்க வேண்டும் என்று மன்னன் விரும்பினான்.

ஆயினும் அதை வெளிப்படையாகச் சொல்லாமல், மந்திரி சபையைக் கூட்டி, "நம்முடைய நாட்டில் மிகவும் அறிவாளியான இளைஞர்கள் உள்ளார்களா? என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதற்காக நாளை ஒரு போட்டிக்கு அறிவிப்பு செய்ய உள்ளேன். அறிவும், திறமையும் உள்ளவர்கள் கலந்து கொள்ளட்டும்!" என்று தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தான்.

மந்திரிகள் அதற்கு சம்மதித்தனர். மறுநாள் தண்டோரா மூலம் அந்த அறிவிப்பு வெளியானது.

"நாட்டில் அறிவும், திறமையும் உள்ள இளைஞர்களுக்காக ஒரு போட்டி நடைபெறுகிறது. தங்கள் அறிவின் மேலும், திறமையின் மேலும் நம்பிக்கையுள்ளவர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொள்ளலாம்.

கலந்து கொண்டு வெற்றி பெற்றால் அதற்குத் தக்க பலன்களை அடையலாம்" என்று அறிவித்தான்.



மறுநாள் ஆர்வம் மிக்க இளைஞர்கள் பலர் ஒன்று கூடினர். என்ன போட்டியை அரசர் வைக்கப் போகிறார்? பொது அறிவுக் கேள்விக்கான விடைகளா, வலிமையைச் சோதிக்கும் போராட்டமான, புத்திக்கூர்மையை எடுத்துக்காட்டக்கூடிய விவேகமான விடயங்களா? என்று தெரியாமலேயே இளைஞர்கள் கூடினர்.

"போட்டிக்கு வந்த போட்டியாளர்கள் மட்டும் தனியே பிரிந்து நிற்கட்டும்!" என்று மந்திரிகளில் ஒருவர் முழங்கினார்.

பதினைந்து வாலிபர்கள் மட்டும் கூட்டத்திலிருந்து பிரிந்து வந்தனர். அவர்களிடம் அரசன் பேசினான்.

அன்பார்ந்த இளைஞர்களே, இதோ எனக்கு அருகில் நிற்கக் கூடிய இந்த இரண்டு வீரர்களைப் பாருங்கள். இவர்களில் ஒருவன் உண்மையான வீரன் மற்றொருவன் அவனைப் போன்ற போலி.

நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால் இதில் அசல் வீரன் யார்? போலி வீரன் யார்?" என்று கண்டுபிடிக்க வேண்டியதே!

"இதற்காக நீங்கள் அவர்களுக்கு அருகே சென்று பார்க்கக்கூடாது. ஒரு அடி இடைவெளியில் நின்றுதான் பார்க்க வேண்டும்.

நீங்கள் உண்மையான வீரனைச் சோதிப்பதாகக் கூறிக் கொண்டு அவர்களைத் தொட முயற்சிப்பதோ, பொருட்களைத் தூக்கி எறிந்து காயமுண்டாகும்படி செய்வதோ கூடாது.

(தொடரும்)

# மகாபாரதம்

அந்தக் காரியம் நிறைவேறியதோடு வேறு அரிய செயல்களையும் அவற்றைக் கொண்டு நிறைவேற்றினான். இனி அவற்றால் பயனில்லை.

எனவே அவற்றை வருணனிடமே ஒப்படைத்து விடுக" என்று கூறி மறைந்தான். அவ்வாறே அவை கடலில் இடப்பட்டன.

பிறகு பாண்டவர்கள் பூமியை வலம் வருபவரைப் போலத் தெற்கு நோக்கிச் சென்றனர். பின் தென்மேற்காய்ச் சென்றனர். பின் வடக்கு நோக்கிச் சென்றனர். இமயமலையைக் கண்டனர்.

அதனையும் கடந்து சென்று மலைகளில் சிறந்த மேருமலையைத் தரிசித்தனர். சுவர்க்




கத்தை நோக்கி அவர்கள் பயணம் தொடர்ந்த போது திரௌபதி சோர்ந்து விழுந்து இறந்து விட்டாள்.

அதிர்ச்சி அடைந்த பீமன், "இந்த தெய்வ மகள் ஏன் இப்படி விழுந்து விட்டாள்?" என வினவினான். அதற்கு தருமர், "ஐவரிடமும் சமமான அன்பு வைக்க வேண்டியவள், அருச்சுனனிடம் மிகவும் பிரியமாக இருந்தாள். அதனால் இந்த நிலை ஏற்பட்டது" என்று பதிலுரைத்தார்.

பின்னர் திரும்பிக் கூட பார்க்காமல் போய்க் கொண்டிருந்தார். சற்று நேரத்தில் சகாதேவன் மயங்கி வீழ்ந்தான். "அண்ணா சகாதேவனின் இந்நிலைக்கு என்ன காரணம்?" என்றான்.

"தன்னிடம் உள்ள சாத்திர அறிவு வேறு யாரிடமும் இல்லை என்ற ஞானச்செருக்குக் காரணமாக அவனுக்கு இக்கதி ஏற்பட்டது" என்றபடியே தருமர் போய்க் கொண்டிருந்தார்.

சிறிது நேரத்தில் நகுலன் சாய்ந்தான். "தன்னைவிட அழகில் சிறந்தவர் யாருமில்லை என்ற அழகுச் செருக்குக் காரணமாக அவன் அப்படி வீழ நேரிட்டது" என்று திரும்பிப் பாராமல் தருமர் விரைந்தார்.

அடுத்து அருச்சுனன் வீழ்ந்து இறந்தான். அதற்கு "தான் ஒருவனே பகைவரை வெல்ல முடியும் என்ற வீரச் செருக்கே அவனுக்கு வீழ்ச்சியை ஏற்படுத்தியது" என்றவாறே தருமர் போய்க் கொண்டிருந்தார்.

பீமனுக்கும் தலை சுற்றியது, "அண்ணா, இதற்கு என்ன காரணம்?" என்றான் பீமன். "தன்னைவிட பலமுள்ளவர்கள் யாருமில்லை என்னும் வலிமைச் செருக்குதான் காரணம்" என தருமர் சொல்லி முடிப்பதற்குள் பீமன் உயிர் நீத்தான்.

தருமர் போய்க் கொண்டே இருந்தார். நாய் மட்டும் அவரைத் தொடர்ந்தது. உயிருக்கு உயிரான அனைவரும் மாண்ட போது தருமர் ஏன் மனக் கலக்கமோ துயரோ அடையவில்லை? காரணம் அவர் துறவு மேற்கொண்ட போதே பந்த பாசங்கள் மறைந்தன. அவர் எந்த பரபரப்புமின்றி போய்க்கொண்டிருந்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிய பழங்களில் அதைக் கொள்ளுவோம். இதைத் தள்ளுவோம் என்று தேர்வது எப்படி?
– ஷேக்ஸ்பியர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மீண்டும் கோரத் தாண்டவமாடும் கொரோனாத் தொற்று

மனித சமூகம் இனி மீளவும் வாழவும் முடியாதென்பதுபோல கொரோனாப் பெருந் தொற்று சுற்றிச்சுழன்று மனித குலத்தைத் தாக்கி வருகிறது.

கொரோனாத் தொற்றில் இருந்து மக் களைப் பாதுகாப்பதற்கான ஒரே வழி தடை மருந்தேற்றுதல் என்ற அடிப்படையில், சினோ பார்ம் தடை மருந்து இரண்டு தடவைகள் ஏற்றப்பட்டன.

கொரோனாப் பெருந்தொற்றில் இருந்து பாதுகாப்பதன் பொருட்டு சினோபார்ம் தடை மருந்து ஏற்றியதன் காரணமாக உடல் உபா தைகளுக்கு ஆளானவர்கள் இருக்கவே செய்கின்றார்கள்.

இதில் சிலர் உயிரிழந்துபோன சம்பவங் களும் நடந்தாயின. இந்த நிலையில் இப் போது பைசர் தடை மருந்தேற்றுகின்ற நட வடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

பைசர் தடை மருந்து ஏற்றினால் போதுமா? என்றால் அதுவும் இல்லை. நான்காவது தடவையும் தடை மருந்து ஏற்ற வேண்டிவரும் என்று கூறப்படுகின்றது.

இவ்வாறு கொரோனாப் பெருந்தொற்றில் இருந்து மக்களைப் பாதுகாத்தல் என்ற பேரில் தடைமருந்தூடாக சர்வதேச வியாபாரம் களை கட்டியிருக்கிறதோ என்று எண்ணத் தோன்று கிறது.

ஆம், தடை மருந்துகளைத் தொடர்ச்சி யாக ஏற்றிவருகின்ற மக்களின் உடல் ஆரோக்கியம், அவர்களின் உடல் நிலையில் ஏற்பட்டுள்ள மாற்றம் என்பன பற்றி எவரும் ஆய்வு செய்வதாக இல்லை.

மாறாக தடைமருந்தேற்றுவதுதான் ஒரே வழி என்று இடைவிடாது கூறுகின்ற மருத் துவ சமூகம் தடைமருந்து ஏற்றுவதால் நிகழு கின்ற பிரச்சினைகள் தொடர்பில் தமக்கு எந்தப் பொறுப்பும் இல்லை என்பதுபோல நடந்து கொள்வதுதான் விசித்திரமாகவுள்ளது.

நிலைமை இதுவாக இருக்கையில், இப் போது இலங்கை முழுவதிலும் ஒமிக்ரோன் தொற்று வேகமாகப் பரவத் தொடங்கியுள் ளது.

இதுபற்றி மருத்துவர்களும் எச்சரிக்கை செய்து வருகின்றனர்.

எனினும் ஒமிக்ரோன் தொற்றில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை களை அரசாங்கம் எடுக்கும் என ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது.

அதாவது நாட்டை முடக்கி ஒமிக்ரோன் தொற்றில் இருந்து மக்களைப் பாதுகாத்தல் என்ற பேச்சுக்கே இனி இடமில்லை என்பதை அறுதியிட்டுக் கூறமுடியும்.

ஆக, கொரோனாத் தொற்றும் அதன் திரிபு நிலைகளில் இருந்தும் மக்கள் தங்களைப் பாது காத்துக் கொள்வதாக இருந்தால், அதற் குரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை பொதுமக் கள் பின்பற்றுவது கட்டாயமானதாகும்.

எனினும் இதுவிடயத்தில் பொதுமக்களின் பொறுப்பு திருப்தியாக இல்லை என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

அதாவது முகக் கவசம் அணிதல் என்பது சட்டத்தின் பிடியில் இருந்து தப்புவதற்கான தாக இருக்கின்றதே தவிர, கொரோனாப் பெருந்தொற்றில் இருந்து பாதுகாப்பதற்கான தாகத் தெரியவில்லை.

எனவே மீண்டும் வேகமெடுத்துள்ள கொரோ னாப் பெருந்தொற்றில் இருந்து தம்மைத் தாமே பாதுகாத்துக்கொள்ளப் பொதுமக்கள் தயாராக வேண்டும்.

## பசிலின் புதிய சட்டமூலத்திற்கு எதிராக நீதிமன்றை நாடவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

(கொழும்பு)

எமது நாடு ஏற்க னவே மிகமோசமான நிதி மற்றும் பொருளா தார நெருக்கடிக்கு முகங் கொடுத்திருக்கின்ற தற் போதைய சூழ்நிலை யில் பொருட்கள், சேவை கள் மீதான வரிவிதிப்பு தொடர்பில் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற புதிய சட்டமூலமானது மிகமோசமான ஊழல் மோசடிகளுக்கும் நிதி நெருக்கடிகளுக்கும் வழி வகுக்கும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாரா ளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்து ள்ளார்.

கொழும்பிலுள்ள எதி ர்க்கட்சித் தலைவர் அலு வலகத்தில் நேற்று புத ன்கிழமை ஏற்பாடு செய் யப்பட்டிருந்த ஊடகவிய லாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளி யிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறி ப்பிட்டார்.

அத்துடன் அச்சட்டமூ லத்தின் ஊடாக நிதிய மைச்சர் தமக்கு நெருக் கமானவர்களுக்கு வரிச் சலுகைகளை வழங்கக் கூடிய சாத்தியம் காண ப்படுகின்றது.

ஆகவே பொதுநி தியை நிர்வகிக்கும் அதி காரத்தைக் கொண்ட பாராளுமன்றத்தைப் புற க்கணிக்கும் வகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பிற்கு முற் றிலும் முரணான இச் சட்டமூலத்திற்கு எதிரா கக் கருத்துக்களை வெளி யிடும் அனைத்துத் தரப் பினருக்கும் நாம் ஆதர வளிக்கும் அதேவேளை, இதற்கெதிராக நீதிமன் றத்தை நாடுவதற்கும் திட்டமிட்டுள்ளதாகவும் கூறினார். (ம)

## கரவெட்டியில் விபரீத முடிவெடுத்த முதியவர் ஒருவர் மரணம்

(கரணவாய்)

கரவெட்டியில் விபரீத முடிவெடுத்த முதியவர் ஒருவர் உயிரிழந்துள் ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை கரவெட்டி மத்திய பகுதியில் இடம்பெற்று ள்ளது. இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த இராமநாதன் சிவலிங் கம் (வயது- 78) என்ற வயோதிபரே மரணமா னவராவார்.

இச்சம்பவம் தொடர் பில் கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் விசார ணைகளை மேற்கொ ண்டார். இதன்போது 11 ஆம் திகதி இடப்பட்டு, பின்னர் 25 ஆம் திகதி மாற்றப்பட்ட இரண்டு கடிதங்கள் வீட்டில் இரு ந்து மீட்கப்பட்டுள்ளது.

அதில் ஒன்று மரண விசாரணை அதிகாரி க்கும் மற்றையது நெல் லியடிப் பொலிஸாருக்கும் எழுதப்பட்டிருந்தது.

நோயின் தாக்கம் தாங்க முடியாது தான் உயிர் இழப்பதாகவும் கடிதத்தில் எழுதப்பட்டு ள்ளது. (ம-60)

## கொடிகாமத்தில் இ.போ.ச பேருந்து மீது தாக்குதல்

யாழில் இருந்து கன கம்புளியடி ஊடாக கொடி காமம் நோக்கிப் பயணி த்த இ.போ.ச பேருந்து மீது நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற் பகல் 6.20 மணியள வில் மட்டுவில் பகுதியில் வைத்து தாக்குதல் நடா த்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கி ளில் வந்தவர்கள் பேருந் தினை வழிமறித்து பேரு ந்து மீது தாக்குதல் நடா த்தியபோது பேருந்தில் வந்தவர்கள் தாக்குதல் நடாத்தியவரில் ஒரு வரை மடக்கிப் பிடித்த போதிலும் அவர் தப்பி ஓடியிருப்பதாகத் தெரிவி க்கப்படுகிறது.

குறித்த தாக்குதலில் பேருந்தின் கண்ணாடி சேதமடைந்திருப்பதாக வும் இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய் யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-30)

## புலிகளை மீள உருவாக்க முயற்சித்த விவகாரம்
### கையெழுத்துக்களை பரிசோதிக்க நீதிமன்றம் உத்தரவு

தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பை மீள உருவாக்கும் நோக்கில் ஈடுபட்டதாக கூறி கைது செய்யப்பட்டு விளக்கம றியலில் வைக்கப்பட்டு ள்ள 26 சந்தேக நபர் களின் கையெழுத்துக் களை பரிசோதனை செய்து மன்றுக்கு அறிக் கையளிக்குமாறு கொழு ம்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேலதிக நீதவான் சந்திம லிய னகே, இதற்கான உத்த ரவை அரச கையெழு த்து பரிசோதகருக்கு ,நேற்று முன்தினம் பிறப் பித்துள்ளார்.


இந்த சந்தேக நபர் கள், புலிகள் அமைப்பில் இணைவதற்காக விண் ணப்பங்களைப் பூர்த்தி செய்துள்ளதாகவும் அவை தமது அதிகாரிகளால் மீட்கப்பட்ட பின்னர் கட ந்த 2020 மார்ச் 26 ஆம் திகதி சந்தேக நபர் கள் கைது செய்யப்பட் டதாகவும் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசார ணைப் பிரிவினர் நீதி மன்றுக்கு அறிவித்துள்ள னர்.

அதன்படி, இந்த சந் தேக நபர்கள் நிரப்பிய தாக நம்பப்படும் குறித்த விண்ணப்பத்தில் உள்ள கையெழுத்தினையும் சந்தேக நபர்களின் கையெழுத்தினையும் ஒப்பீடு செய்ய வேண்டியு ள்ளதாகவும் அதற்கு அனுமதியளிக்குமாறும் கோரினர்.

அதன்படியே இந்த உத்தரவு நீதிமன்றினால் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய் யப்பட்டுள்ள 26 இளை ஞர்களும் யாழ். பிரதே சத்தை சேர்ந்தவர்கள் என்பதுடன் அவர்கள், சட்டமா அதிபரின் ஆலோ சனை கிடைக்கும் வரை யில் தொடர்ந்து விளக் கமறியலில் வைக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (ம)

# சத்திய தரிசனம்



## கண் இரண்டும் வாய் ஒன்றும் ஏன்?

- பலாப்பழம் இருக்க, பலாக்காயை ருசிப்போமா? இனிமையான சொற்கள் இருக்க கடுமையான சொற்களைப் பிரயோகிக்கலாமா?
- அடுத்தவரை மகிழ்விப்பது அறம். அதற்காக நாம் பணம் தேடி ஓட வேண்டாம். நல்ல சொற்களே போதுமானது.
- கண்டவற்றுள், கேட்டவற்றுள் பாதியையே பகர வேண்டும் என்பதற்காகவே கண்இரண்டும், வாய் ஒன்றுமாக வார்த்தளித்தான்.
- தன்னைக் கல்லால் அடித்தவனுக்கும் இனிய கனியைத் தருகிறது மரம். நம்மைச் சொல்லால் அடிப்பவருக்கு கனிவான சொற்களைத் தரவேண்டும்.
- உள்ளத்தில் அன்பு இருந்தால் வார்த்தைகளில் இனிமை, பாலில் ஊறிய பழம்போல இருக்கும்.
- வாசிக்கத் தெரிந்தவன் வாசித்தால் புல்லாங்குழலில் கீதம் ஒலிக்கும். தெரியாதவன் ஊதினால் காற்றுதான் வரும். அறிஞர்களின் பேச்சில்தான் பொருள் இருக்கும்.
- எந்த ஒரு வார்த்தை இறை சிந்தனையில் ஒருவனை ஈடுபடுத்துமோ அதுதான் அவனுக்கு மந்திரம். மற்றவனுக்கு அந்த வார்த்தை பொருளற்றதாக இருந்தாலும் சரி, மனதை ஒருமுகப்படுத்துவதே மந்திரம்.
- ஆன்மிகத்தின் ஆரம்பப் பாடமே பேச்சைக் கட்டுப்படுத்துவது என்பதுதான். பேச்சு மனிதனுக்கு இறைவன் அளித்த படைக்கலன்கள். மற்ற மிருகங்களுக்குத் தன்னைக் காத்துக் கொள்ள விரைந்தோட வசதியான பாதங்களும், கூரான நகங்களும் மற்றும் கொம்புகளும், தந்தங்களும், அலகுகளும் அளித்த கடவுள் [illegible] பேச்சு ஒன்றுதான். இதன்மூலம் எதிரியைப் பலமிழக்கச் செய்து [illegible] பல்வகைத் தாக்குதல்களிலிருந்து தப்பி அவற்றை முறியடித்து மனிதனால் செயற்பட முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

63


கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



திருவள்ளுவர் சொன்ன, 'சமன் செய்து சீர்தூக்கும் கோல்' இந்த ஒற்றைத் தட்டு தராசு தான் இந்த சமன் செய்து சீர்தூக்கும் கோல் என்பது வேறு ஒன்றையும் நினைவுபடுத்துகிறது. தமிழ் மாதம் ஐப்பசிக்குத் துலாம் மாசம் என்ற பெயர் உண்டு. சூரியன், துலாம் இராசியில் சஞ்சரிக்கும் மாதம் இது என்பதால் தான் இந்தப் பெயர்.

சூரியன், துலாம் இராசியில் நுழைகிற நாள் அன்றைக்குப் பூமியில் பகலும் இரவும் சம நீளத்தில் இருக்கும். அதாவது பகல் 12 மணி நேரம், இரவு 12 மணி நேரம் என்பதாக. மற்ற நாட்களில் எல்லாம் பகலுக்கும் இரவுக்கும் நீளத்தில் கொஞ்சம் கூடுதல், குறைவு வித்தியாசம் இருக்கும். எனவே, சம மான நீளம் கொண்ட பகல்-இரவை கொண்ட நாள் இருக்கிற மாதத்திற்கும் இராசிக்கும் துலாம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள் நம் முன்னோர்கள்.

படம் 2 வெள்ளைக்கோல்வரை ஒற்றைத்தட்டு தராசு



### தொடி, கஃசு போன்ற நிறை அளவுகள்

தொடி, கஃசு போன்ற நிறை அளவுகளை குறளியே காண முடிகிறது.

"தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாதுசாலப்படும்." திருக்குறள்

பொருள் - நிலத்தைப் பல முறை உழுது, தொடி அளவு எடை உள்ள மண்ணை, கஃசு அளவு எடை உள்ளதாகக் காயவிட்டால், கைப்பிடி அளவும் எரு வேண்டாமல் மிகுதியாக விளையும். இங்கு தொடி, கஃசு என்னும் நிறை அளவைகள் வருகின்றன. அத்துடன் கஃசு என்பது தொடியிலும் சிறிய நிறையாகும். இக் குறளுக்கான மு.வரதராசன் விளக்கம்: ஒரு பலம் புழுதி கால்பலம் ஆகும்படி உழுது காயவிட்டால், ஒரு பிடி எருவும் இடவேண்டாமல் அந் நிலத்தில் பயிர் செலுத்தி செழித்து விளையும். இதன் பிரகாரம் 1 தொடி = 1 பலம் ஆகவும், 1 கஃசா = ¼ பலம் ஆகவும் விளக்கப்படுகிறது.

### நாணயங்கள்

நாணகம் என்னும் பதம் நாணயம் என அழைக்கப்படுகிறது. நாணயங்கள் மேலை நாட்டிலும் கீழ் நாட்டிலும் கி.மு. 8 ஆம் நூற்றாண்டில் தோன்றி, அது முதல் உலகத்தில் உள்ள எல்லா நாடுகளிலும் பரவியுள்ளன. நாணயங்கள் தொடக்கத்தில் சில குறிப்பிட்ட உருவங்களையுடையதாயிருந்தன.

உலோகத் துண்டுகளை எடை போடுவதற்குத் தராசு கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் நாணயங்கள் குறிப்பிட்ட எடையுடையனவாக ஆயின. ஆகவே குறிப்பிட்ட உருவமும் எடையுமுள்ள நாணயங்கள் தோன்றின.

தமிழரின் பண்டைய சிற்பம் ஒன்று
படம் 3 வெள்ளைக்கோல்வரை



தமிழர் கல்வெட்டுகளில் மட்டுமல்லாது இலக்கியங்களிலும் இக் காசுகள் பற்றிய பல எண்ணங்களைக் காண முடிகிறது. நாணயங்களை குறிப்பிட்ட எடையுடன் பண்டைய தமிழர்கள் உருவாக்கியிருந்தார்கள். காசு, மாடை, கருங்காசு, ஈழக்காசு, அக்கம், செப்பு நாணயம், திரமம் போன்ற நாணய வகைகள் அவற்றின் எடைகள், குறிப்பிட்ட மன்னர் காலத்தில் அவை அழைக்கப்பட்ட தன்மை (இராசராசன் மாடை, இராசேந்திர சோழன் மாடை) போன்ற விபரங்கள் இருக்கப் பெற்றன.

முதலில் செம்பொன்னால் செய்யப்பட்ட நாணயம் பின்னர் தன் மாற்று குறைந்த நிலையில் செய்யப்பட்டிருந்தன. பொன்னல்லாத காசு கருங்காசு எனப்பட்டது. நற்காசு, ஈழக்காசு போன்றவை அன்றா பாவனையில் இருந்தவையாகும்.

தமிழ் லெக்ஸிகன் காசு என்பது 28 தானிய எடையுள்ளது எனவும் மாசை உழுந்து நிறையளவு உள்ள பழைய நாணய வகை எனவும் மாடை 10 குன்றிமணி எடையுள்ள நாணய வகை எனவும் தோலா 1 ரூபாய் எடையுள்ள வெள்ளி நாணயம் எனவும் குறிப்பிடுகிறது. இவ்வாறு நாணயம் பற்றி "தமிழர்கள் அளவைகள்" என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது.

### வழக்கத்தில் இல்லாத பல நிறுத்தல் அளவைகள்

நிறுத்தல் அளவையில் குன்றிமணி, வராகனெடை, பலம், வீசை, துலாமெனப் பல அலகுகள் பற்றிப் பார்த்தோம். இதைவிட மேலும் பல நிறுத்தல் அளவை அலகுகளும் பண்டைய தமிழர் கலாசாரத்தில் இருந்துள்ளன.

இந்நிறுத்தல் அளவை அலகுகள் பற்றி டாக்டர் கே.பகவதியால் எழுதப்பட்டு 1983 இல் வெளி வந்த "தமிழர் அளவைகள்" என்னும் நூலின் கலைச்சொற்கள் அகராதியில் கொடுக்கப்பட்டுள்ளன.

அதிலிருந்து அவை தொகுக்கப்பட்டு வாசர்களுக்காக இங்கே தரப்படுகிறது. அவ் அலகுகளாவன, பதார்த்தம் = சர்வதேச அலகு மோல் (mol), 1 பிரத்தம் = 10 பதார்த்தம், 1 ஆடகம் = 5 பிரத்தம், அருமணம் = 8 ஆடகம், அஞ்சலி = 4 பலம், 2 அட்டமிகை = 1 பலம், 1 ஆசிதம் = 200 துலாம் (ஒரு வண்டிப்பாரம்), எடை= 25 பலம் (54 இறாத்தல்), எள் = 8 கடுகு, ஒஞ்சை = 9 வராகனெடை, கட்டி =25 பலம், கண்டி (பாரம்) =500 இறாத்தல், கரசை = 400 மரக்கால், 4 கருடம் = 1 பலம், காசு =28 உழுந்து, 40 காணி = 1 மஞ்சாடி, குடுப்பம் = 4 பலம், குந்தம் = [illegible] பலம், தைசா = 2 கழஞ்சு, 4 [illegible]கை = 1 பலம், 8 சவலம் = 1 வராகன், 5 சிற்றாழாக்கு=1 தோலா, 1 சிறுகடுகு=8 நுண்மணல், 2 சீரகரை=1 சீரகம், சுமை = பாரம், சுவடு = 360 நெல், சோடு = 360 நெல், தடை = 80 பலம், தலைப்படி=6 பலம், 6 திறாம் = 5 தோலா, துலை= 100 பலம், 1 தோலா=180 தானியம், நிட்கம்=20 மஞ்சாடி, பக்காச்சேர்=24 பலம், பஞ்சரி=1 வீசையளவு, 1 படி = 100 பலம், பத்திடை= 1000 பலம், 1 பற்பணம் = 1 பலம், பாவு=2 பலம், பிசு = 400 பலம், பிளவு=2 வீசம், மகதப்படி=12 பலம், 1 மாடை = 10 குன்றிமணி, முட்டி = 1 பலம், 8 முத்து = 1 பணவெடை எனத் தரப்பட்டுள்ளது.

இதைவிட சில சொற்களுக்கு விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது. அவையாவன, ஆடவல்லான் என்பது சோழர் கால கோயில் நிறைகல், ஆணிக்கல் என்பது பொன் நிறைகல், இடங்கம் என்பது இரத்தினம் நிறுக்க உபயோகப்படுவதும் 24 இரத்தினம் கொண்டதுமான நிறைகல், எடைக்கட்டு என்பது கழிவு நிறை, எடைகொடை என்பது நிறைக்கு நிறை, ஐயவி என்பது சிறு நிறை, கட்டளைக் கல் என்பது பொன் உரை பார்க்கும் கல், கணிசம் என்பது கையெடை, காப்பொன் என்பது 100 பலம் நிறையுள்ள பொன், குடிஞைக்கல் என்பது ஒரு நிறைகல், கைக் கணிசம் என்பது கையால் மதிக்கும் மதிப்பு, கைப் பாணிப்பு என்பது ஒரு கையால் எடுத்து நிறுத்திடும் மதிப்பு, கொள் என்பது முற்காலத்தில் வழங்கிய சிறு நிறையளவு, நகரக் கல் என்பது சோழர் கால நிறைகல், பதார்த்தம் என்பது 10 கருடம் கொண்ட நிறை ஆகும்.

### முகத்தல் அளவை

தமிழர்கள் பல்வேறு அளவைகளைப் பயன்படுத்தியுள்ளனர். அவற்றுள் முகத்தல் அளவையும் ஒன்றாகும். முகந்து அளந்து கொடுத்த காரணத்தினால் முகத்தல் அளவை என்ற பெயர் பெற்றது.

பால், மோர், நெய் போன்ற நீர்ம பொருட்களை உழக்கு போன்ற படிகளால் முகந்து அளப்பது முகத்தல் அளவையாகும். இது பெய்தல் அளவை, கரண்டி அளவுகள் போன்ற சில உட்பிரிவுகளைக் கொண்டது. நமது ஊர்களில் தண்ணீர் மொண்டுவா, என்று கட்டளையிடுவார்கள். அது முகந்து என்பதன் பேச்சு வழக்கே.

பாய்மப் பொருட்களை குவளையிலோ அல்லது செம்பிலோ முகந்து எடுக்க முடியும். ஆகையால் பாய்ம பொருட்களை அளப்பதை முகத்தலளவை என்ற பெயர் வந்தது. நெல், அரிசி போன்றவற்றையும் முகந்து அளந்துள்ளனர். இன்றும் அளக்கின்றனர். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16 பேர்...

காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 15,332 ஆக உயர்வடைந்துள்ளது. (ம)

## நாளாந்த...

டில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 604,581 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## இரு நாடுகளு...

வுகளை பெற்றுக்கொடுக்க முடியாது. இந்தியா எமது நட்பு நாடு என்ற ரீதியில் இரு தரப்பு இராஜதந்திர உறவுகளையும் கவனத்தில் கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

வடக்கு கடல் எல்லையில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி செயற்பாடுகள் நீண்டகால பிரச்சினையாக காணப்படுகின்றது. நீதி அமைச்சு நேரடியாக தலையிட்டு இந்த விடயங்களை தீர்க்க முடியாது.

மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி செயற்பாடுகள் குறித்து இலங்கை கடற்படை, வெளிவிவகார அமைச்சு மற்றும் மீன்பிடித்துறை அமைச்சு ஆகியவற்றின் தலையீட்டுடனே இதனை முன்னெடுக்க முடியும்.

எனினும் இவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த நாம் எதிர்பார்கின்றோம். மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் இது குறித்து பேசவுள்ளோம். அவசியமான சட்ட திருத்தங்களை செய்யவேண்டும் என்றால் அதனையும் கலந்துரையாடல் மூலமாக முன்னெடுக்க தயாராக உள்ளோம் என்றார். (ம)

## வீட்டிலிருந்து...

பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து நேற்று புதன்கிழமை சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த 61 வயதான சுப்பிரமணியம் தவராசா என்பவரே இவ்வாறு சடலமாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-30)

## ராஜபக்ச...

ந்த வாரம் இலங்கைக்கு மேற்கொண்ட சுற்றுப் பயணத்தின் இறுதியில் இலங்கை அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவை சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார்.

இந்தப் பேச்சுகளுக்குப் பின்னர் இது தொடர்பாக அறிக்கையிட்ட அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச, இலங்கை மனித உரிமை நிலைவரங்களில் முன்னேற்றம் அடைந்துள்ளதாக தாரிக் அகமட் பாராட்டியதாக குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் அதன்பின்னர் இது தொடர்பாக தனது டுவிட்டர் பதிவை வெளியிட்ட தாரிக் அகமட் இலங்கையின் நல்லிணக்கம், நீதி மற்றும் மனித உரிமை நிலைவரங்களில் முன்னேறவேண்டிய அவசியத்தை வலியுறுத்தியிருந்தார்.

இந்த நிலையில் தாரிக் அகமட்டின் இலங்கை பயணம் தொடர்பாக பிரித்தானியத் தூதரகம் நேற்று முன்தினம் ஒரு அறிக்கையிடலை வெளியிட்டுள்ளது.

அதில் தாரிக் அகமட்டுடனான சந்திப்புக் குறித்து இலங்கை அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவின் பணியகம் குறிப்பிட்டதைப் போல இலங்கை மனித உரிமை நிலைவரங்களில் முன்னேற்றம் அடைந்துள்ளது என தாரிக் அகமட் பாராட்டியதான எந்த ஒரு கருத்தும் இல்லை.

மாறாக இலங்கையில் நல்லிணக்கம், நீதி மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதன் அடிப்படையில் நிரந்தரமான மற்றும் உள்ளடக்கிய சமாதானத்தை கட்டியெழுப்புவது முக்கியம் என்ற விடயம் வலியுறுத்தப்பட்டதாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் வடக்கு, கிழக்குக்கு அவர் மேற்கொண்ட பயணத்தின்போது நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலில் எவ்வாறு முன்னேறுவது என்பது குறித்து தமிழர் தரப்பின் கருத்துகள் கேட்டறியப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## வவுனியாவில்...

பேருக்கு நேற்று கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது

வவுனியா கல்வியியற் கல்லூரியில் கல்வி பயிலும் ஆசிரிய மாணவர்கள் இருவருக்கு காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட துரித அன்டிஜன் பரிசோதனையில் இருவருக்கும் கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்கள் 50 பேருக்கு எழுமாறாக துரித அன்டிஜன் பரிசோதனை [illegible] மேலும் 18 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டது.

அத்துடன், வவுனியா பல்கலைக் கழகத்தில் காய்ச்சல் உள்ளிட்ட கோவிட் அறிகுறிகள் தென்பட்ட மாணவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட துரித அன்டிஜன் பரிசோதனையில் 16 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் 20 பேருக்கும், வவுனியா பல்கலைக்கழகத்தில் 16 பேருக்குமாக 36 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-250)

## அதிகாரத்தை...

க்கை விடுக்க முடியாது. ஆட்சியாளர்களுக்கும் மக்களுக்கும் இடையில் உள்ள சமூக உடன்படிக்கையின் பிரகாரம் அதனைச் செய்ய வேண்டியது ஆட்சியாளர்களின் தார்மீக கடமை.

நாட்டில் நிர்வாகத்தில் உயர் பதவி வகிப்பவர்கள் பதவி விலகுகிறார்கள், அல்லது பதவி விலக்கப்படுகிறார்கள். உண்மையில் அரசாங்கம் மக்களுக்கு தடையற்ற மின்சாரத்தை வழங்க வேண்டும். அது மக்களின் உரிமை. அவசியமான ஒன்று. ஆனால் மின்சாரத்தை வழங்குவதற்கு எரிபொருள் இல்லை.

எரிபொருளை கொள்வனவு செய்ய டொலர் இல்லை என்ற கதைகளை அரசாங்கம் கதைக்க முடியாது. மத்திய வங்கியின் ஆளுநரும், அரசாங்கமும் மக்களுக்குப் பொய் சொல்கிறார்கள்.

வெறுமனே கதை சொல்லிக் கொண்டு இருக்காமல், மின்சாரத்தை தடையின்றி வழங்க முடியுமா என அரசாங்கம் எங்களுக்குச் சொல்ல வேண்டும். முடியும் என்றால் செய்யுங்கள் என நான் ராஜபக்ஷக்களுக்கு சவால் விடுக்கிறேன்.

ஆகவே மக்களின் தேவைகளை நிறைவேற்றுவது ஆட்சிகளின் கடமை, பொறுப்பு. அதனை செய்ய முடியாது போனால் ஆட்சி அதிகாரத்தை கைவிட்டுவிட்டு வீடு செல்லுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம் என்றார். (ம)

## இரா...

தீவில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட விவசாய நெற்செய்கையின் அறுவடை விழா நேற்று சிறப்புற நடைபெற்றுள்ளது. (ம-281)

## தீக்கா...

கிளிநொச்சி ஜெயந்திநகரில் மோட்டார் சைக்கிளை திருத்திக் கொண்டிருந்த போது அருகில் இருந்த பெற்றோலை வீட்டில் வளர்ந்த கோழி தட்டிவிட்டுள்ளது. இதனால் தீக்காயத்துக்குள்ளான சூசைப்பிள்ளை யோகநாதன் (வயது-57) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே தீக்காயத்துக்குள்ளான நிலையில் நேற்றைய தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

மேலும் கிளிநொச்சி சாந்தபுரத்தில் அதிக பனி காரணமாக நெருப்பை மூட்டிவிட்டு முதுகுப்பக்கத்தினை காட்டிக்கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் சேட்டில் தீப்பற்றிய நிலையில் தீக்காயத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

இதில் அதே இடத்தினைச் சேர்ந்த காளிமுத்து இராமையா (வயது-63) என்பவரே உயிரிழந்தவராவார்.

இருவரது மரணம் தொடர்பான விசாரணைகளை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம)

## என்றுமில்லா...

ஊழல் அற்ற ஆட்சியை உருவாக்கக்கூடிய சர்வவல்லமையும் தேசிய மக்கள் சக்தியில் இருக்கின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்றைய தினம் இடம்பெற்ற மாநாடு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார். (ம)

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 26/01/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1203
வெற்றி இலக்கங்கள்
மீனம் 1 8 9 7 5 6
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 26/01/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1007
வெற்றி எழுத்து W சுப்பர் இலக்க 19 வெற்றி இலக்கங்கள் 17 27 63 75

### மஹஜன சம்பத

திகதி 2022/01/26
சீட்டிழுப்பு இலக்கம் 4659
ஆங்கில எழுத்து B வெல்லப்பட்ட இலக்கங்கள் 7 5 9 7 3 2
தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 26.01.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2954
ஆங்கில எழுத்து L வெற்றி இலக்கங்கள் 07 11 70 71
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி - 2022.01.26
சீட்டிழுப்பு இலக்கம் - 689
Y 07 14 33 80
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

### வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 1689 திகதி 2022.01.26
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 65 66 69 70
தேசிய லொத்தர் சபை

### சனிதா Shanida

புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.01.26
சீட்டிழுப்பு இல: 3797
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.5,076,300/-
வெற்றி இலக்கங்கள் 05 29 38 71 ஆங்கில எழுத்து A
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### அத கோடிபதி ADA KOTIPATHI

புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.01.26
சீட்டிழுப்பு இல: 1462
வர்ணம்: இளஞ்சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.4,373,080/-
வெற்றி இலக்கங்கள் 09 19 47 75 ஆங்கில எழுத்து O
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ஜயோதா Jayoda

சீட்டிழுப்பு வாரம் 1806
சீட்டிழுப்பு திகதி 26.01.2022
வெற்றி இலக்கங்கள் 05 14 37 48 ஆங்கில எழுத்து G
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 30,387,320/-
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1636
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 26.01.2022
தினம் புதன்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் W 04 15 24 52
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- 56,374,134/=
அபிவிருத்தி லொத்தர் சபை

### ராசி

சுப்பர் ஜக்பொட் ரூ. 2,424,788/=
திகதி 26.01.2022
வெற்றி வாரம் 3348
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 28 44 51 54 தனுசு
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,606,040/=

### 12 சப்பிரி

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 23 49 51 62 65
சுப்பர் இலக்கம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 207,489,397/-
சீட்டிழுப்பு வாரம் 812
வர்ணம் பச்சை
திகதி 2022.01.26
புதன்கிழமை
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

**UK-975 /=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3577)

**0768226240** DHL

## வேலையாட்கள் தேவை

மருதனார்மடத்தில் இயங்கும் புடவை நிறுவனத்துக்கு தொழில் அனுபவமுள்ள அல்லது பழக விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் தேவை.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(C-3646)

தொடர்புகளுக்கு:-

**076 816 1363, 077 841 7811**

## A/L 2021 கருத்தரங்கு

**புவியியல்**

**P.S.V தினேஸ்**

29,30 (சனி, ஞாயிறு)

9 மணி தொடக்கம் 2 மணிவரை

Techno world

வெலிங்டன் சந்தி அருகாமை யாழ்ப்பாணம்.

(C-3627)

**- 077 017 5346**

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் அச்சுவேலி பத்தமேனி பகுதியில் 24 பரப்புக் காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

**1 பரப்பின் விலை - 3.5 லட்சம்**

**(மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய்)**

**15 அடி பாதையுடன்,**

**காபற் றோட், நல்ல சூழல், நிலப்பரப்பு**

**(அச்சுவேலி பஸ் நிலையத்திலிருந்து 2 Km தூரம்)**

(அச்சுவேலியிலிருந்து பலாலி செல்லும் வீதியில் தோலகட்டி கம்பனி முன்வீதியில்)

(9861)

தொடர்பு:-

**076 890 9259, 077 015 0353**

## வேலைவாய்ப்பு

**(The Inner Circle (pvt) Ltd)**

**Job! Job! Job!** நீங்கள் சாதாரண தரம் தோற்றியவரா?

திறமைக்கேற்ப நிரந்தரத் தொழில் கிடைக்கவில்லையா? முன்னுரிமை முதல் 40 பதவி வெற்றிடங்கள்.

**கிளைகள்- யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி**

(9860)

- நிர்வாக அதிகாரி
- செயல்திட்ட அதிகாரி
- அலுவலக உதவியாளர்
- மேற்பார்வையாளர்



வயதெல்லை: 18-30. முன்அனுபவம் அவசியமற்றது. பயிற்சிக்காலம் 24,500 + EPF + ETF பின் 45,000க்கு மேல் ஆண்களுக்கு தங்குமிட வசதி செய்து தரப்படும். எம்முடன் இணையவிரும்பின் **076 756 5659** இலக்கத்திற்கு Name, NIC, Place அனுப்புவதுடன்

மேலதிக தொடர்புகளுக்கு:- **076 770 7759**

## வேலையாள் தேவை

பண்ணை வேலை அனுபவம் உள்ள ஆண் வேலையாள் தேவை. உணவு, தங்குமிட வசதி உண்டு.

தொடர்பு (9856)

**077 377 9442**

## தொழில் வாய்ப்பு

அரசினால் அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனத்தின் புதிய கிளை மன்னாரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உங்கள் கல்வித் தகைமை எதுவாகினும் பயிற்சி நெறியுடன் கூடிய கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களுக்கு தொழில் வாய்ப்பு

- விநியோகஸ்தர்
- நிர்வாக உத்தியோகத்தர்
- மேற்பார்வையாளர்
- உதவி முகாமையாளர்

**077 556 6226** (9838)

## வேலை வாய்ப்பு

கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, வவுனியா, மன்னார், யாழ். மாவட்டங்களில் எமது நிறுவனங்களை மேம்படுத்துவதற்கு தரமானவர்கள் தேவை!

**விண்ணப்பிக்கக் கூடியவர்கள் :**

- 50 வயதிற்கு மேற்பட்ட MBA, BBA பட்டதாரிகள்.
- Security Service நிறுவனம் ஒன்றை வழிநடத்தக் கூடியவர்கள்.
- அரச, தனியார் வேலைகளில் இருந்து ஓய்வுபெற்ற உயர் அதிகாரிகள்.
- பொருளாதார பேராசிரியர்கள்.

**சம்பளம் : பேசித் தீர்மானிக்கப்படும்.**

### வாடகைக்கு வேண்டும்

சுன்னாகம், மல்லாகம், இணுவில், மானிப்பாய், உடுவில் பகுதிகளில் அலுவலகமாக பயன்படுத்த உகந்த வீடுகள் வேண்டும்.

**+9477 795 0439**
**0041 79 334 4733**
**+9477 544 2370**

(9857)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும் A9 பிரதான வீதியுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- நிலப்பரப்பு
- கைதடி பிள்ளையார் கோயிலில் இருந்து 500 மீற்றர் தூரம்

பார்வையிடும் நேரம்:-

காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை, விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

(9855)

**077 814 7389, 077 614 7333**

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532

## அகரம் உயர் நிலைக் கல்லூரி

**AHARAM HIGH STANDARD COLLEGE**

**காங்கேயன் துறைச்சாலை**

**மல்லாகம்** **கொக்குவில்**

**புதிய கல்வியாண்டு - 2022 ஆரம்பம்**

தரம் 06 - O/L

வரையான தமிழ் மொழி மூலம்

English medium வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

(22.01.2022 இல் புலமைப்பரிசிற் பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான புதிய தரம் 06 தமிழ்மொழி மூல English medium வகுப்புக்கள் ஆரம்பம்

04.02.2022 [வெள்ளிக்கிழமை]

வளர்பிறை விநாயக சதுர்த்தி அன்று காலை 6.35 - 8.05 வரையான சித்தயோக நன்நாளன்று

அனுமதிகளை 26.01.2022 மாலை 02 மணியில் இருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.

(9832)

"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**குலதீபன் பிருந்தா**

(தாதிய உத்தியோகத்தர் - பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை)

பிறப்பு:-12.01.1985

இறப்பு:- 27.01.2019



ஆண்டு மூன்று ஆனதோ
ஆறவில்லை எம் துயரம்
மாண்டவர் மீண்டு வருவாரோ
எல்லாம் விதி என்று
காட்டி விட்டுச் சென்றாயே
எங்கள் கடைக்குட்டித்
தங்கையே
மறக்க நினைத்தாலும் - உன்
உடன் பிறப்புக்கள்
எப்போதும்
மறக்கப் போவதுமில்லை
மாறப் போவதுமில்லை
எங்கள் வீட்டு அன்புத்
தங்கையே

தகவல்:
மகள் - குயின்சிகா
அம்மா, அக்காமார்,
பெறாமக்கள், மைத்துனர்கள்
[illegible], வரணி.

(C-3643)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.